www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 டிசம்பர்

5/1-

விலை ரூ.2.

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# ஜே.வி.பி. தலைவர்கள் மிருகத்தனமான படுகொலை!

## பாசிச பிரேமதாசா கும்பலின் கிரிமினல் நடவடிக்கை!

இலங்கை - ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி) எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் - நிறுவனர் ரோஹண விஜயவீரா, துணைத்தலைவர் ஹிராத், பொதுச் செயலாளர் உபதிஸ்ஸா காமநாயகே உட்பட அதன் அரசியல் தலைமைக் குழுவின் ஏழு உறுப்பினர்களில் ஆறு பேரை பாசிச பிரேமதாசா கும்பல் மிகவும் கொடூரமான முறையில் கடந்த அக்டோபர் 13, 14 தேதிகளில் படுகொலை செய்துவிட்டது.

ஜே.வி.பி. தலைவர்கள் இராணுவ மோதலிலே கொல்லப்படவில்லை. துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு, நிராயுதபாணிகளான நிலையில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குப் பிறகு பாசிச அதிபர் பிரேமதாசாவின் நேரடி உத்திரவின் பேரில் விசாரணையின்றி இரகசியமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கி முனையில் நடந்த மோசடியான தேர்தல்கள் மூலம் ஆட்சியைப் பிடித்த பிரேமதாசா கும்பல் ஜே.வி.பி.க்கு மக்களிடையே உள்ள ஆதரவு காரணமாக இந்தக் கிரிமினல் குற்றத்தை மூடி மறைப்பதற்கு கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடுகிறது.

''கைது செய்யப்பட்ட பிறகு ரோஹண விஜயவீரா தனது தவறுகளை ஒப்புக் கொண்டார். வன்முறைப் பாதையைக் கைவிடும்படி தனது சகாக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அதன் ஒலிபதிவு நாடா இருக்கிறது; ஜே.வி.பியின் தலைமையகத்துக்கு இராணுவத்தினரை அழைத்துச் சென்றார்; அங்கிருந்த ஹிராத்திடம் இரகசிய ஆவணங்களை ஒப்படைத்துவிட்டு சரணடையும்படி கூறினார்; ஹிராத் விஜயவீராவைச் சுட்டார்; இராணுவத்தினர் குறுக்கிட்டு துப்பாக்கிச் சூடு நடத்தவே இருவரும் மாண்டனர்; அதேபோல பிடிபட்ட காமநாயகே இரகசிய இடத்துக்கு இராணுவத்தினரை அழைத்துப் போய்விட்டு தப்பி ஓட முயன்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார்'' என்று பிரேமதாசா கும்பல் புளுகுகிறது.

அதே சமயம் இச்சம்பவங்கள் பற்றி முழுவிசாரணை நடத்தவும் உத்திரவிட்டுள்ளாராம்! கூடவே ஜே.வி.பி. தலைவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த மாளிகைகளும், தங்கநகைகளும், வெளிநாட்டுப் பாவனைப் பொருட்களும், ஏராளமான பணமும், ஆயுதங்களும் கைப்பற்றியதாகக் கூறிக் கொள்கிறது. ஜே.வி.பி.யின் இலட்சியம், கொள்கை, வழிமுறைகளில் நமக்கு உடன்பாடு கிடையாது. இருந்த போதும் அதற்கு எதிராக பிரேமதாசா கும்பல் பரப்புவதெல்லாம் அவதூறுகள்தான் என்பதில் சந்தேகமில்லை என்றே கருதுகிறோம். தவறான கொள்கை - வழிமுறைகளை மேற்கொண்டாலும் அவற்றிலே அவர்களுக்குள்ள உறுதிப்பாட்டை வைத்தே இந்த முடிவுக்கு வருகிறோம்.

1971 ஆம் ஆண்டு ''எழுச்சி - கலகம்'' தோல்வியுற்ற பிறகு அதன் மீது நடந்த விசாரணையின் போது இலங்கை கிரிமினல் நீதிக் கமிஷன் முன்பு நிறுத்தப்பட்ட ரோஹண விஜயவீரா சொன்னார், ''நாங்கள் புரட்சிக்குத் தயாரித்துக் கொண்டிருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் புரட்சியைத் துவங்கி அரசு மீது போர் தொடுக்கவில்லை. அரசுதான் முன்கூட்டியே தாக்குதல் தொடுத்து, ஆயுதந்தாங்கிய எழுச்சியை நடத்தும்படியான நிர்பந்தத்தை எங்கள் மீது திணித்தது. எவ்வாறாயினும், வர்க்கப்போராட்டமும் புரட்சியும் தவிர்க்க முடியாதது. எனவே என்னுடைய எதிர்கால வாழ்க்கையும் விதியும் என்னவானாலும் எனக்குத் துளிகூட வருத்தமில்லை''

ஜே.வி.பி. இயக்கத் தலைவர் - நிறுவனர் ரோஹண விஜயவீரா.



இந்திய, இங்கிலாந்து இராணுவம் போய் அந்த 1971 'எழுச்சி - கலகத்தை' ஒடுக்கியது. 20,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; மகாவலி ஆற்றிலே மனித ரத்தமே செந்நீராகப் பாய்ந்தது. இப்படிக் கடந்த 20 ஆண்டுகளில் பல ஆயிரம் இளைஞர்களைப் பலிகொடுத்து, கடுமையான தலைமறைவு வாழ்க்கை நடத்திக் கட்டி வளர்த்த இயக்கத்துக்கு ஜே.வி.பி. தலைவர்கள் துரோகம் செய்தார்கள் என்பது அவதூறு தவிர வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

எவ்வளவு கொடிய கிரிமினல் குற்றவாளிகளானாலும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு கைது செய்யப்பட்ட பின் விசாரணைக் கைதிகளுக்குரிய உரிமைகளோடு நடத்தி சட்டப்படியான குற்றங்கள் நிரூபிக்கப்பட்ட பிறகுதான் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் இஸ்ரேலிய மொசாத் போன்ற கூலிப்படைகளை வைத்து தொழில் முறை கிரிமினல் குற்றவாளிகளுக்குப் பயிற்சியளித்து இரகசியக் கொலைப்படைக் குழுக்களைக் கட்டியுள்ளது இலங்கை பாசிச ஆளும் கும்பல். அவற்றை வைத்து அரசியல் எதிரிகளைக் கோரமான முறையில் படுகொலை செய்துவருகிறது. இலங்கையின் இந்த இளைய தலைமுறையையே பூண்டோடு ஒழித்துவிடும் அளவு குற்றமற்றவர்களைப் பிடித்து கோரமான முறையில் கொலை செய்து சாலைகளிலே, ஆறு - வாய்க்கால், கடற்கரைகளிலே விசிறியடிக்கின்றது. மின்கம்பங்களிலே கட்டி வைத்து உயிரோடு கொளுத்துகிறது.

1983 ஜூலை 25 அன்று வெள்ளிக்கடை சிறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, ஜகன உட்பட 55 ஈழப் போராளிகள் மீது கொலை வெறியர்களை ஏவி, கண்களைத் தோண்டி உடலைக் கூறுபோட்டுக் குரூரமான முறையில் கொன்றதில் இருந்து இத்தகைய அரசியல் படுகொலைகள் செய்வது இலங்கை ஆளும் பாசிச கும்பலின் வழமையான வழிமுறையாக உள்ளது. இப்போது அதன் ஆட்சிக்கே அச்சுறுத்தலாக வளர்ந்துவிட்ட ஜே.வி.பி. தலைமையை மிருகத்தனமாகக் கொன்று தீர்த்துவிட்டது. மனித உரிமைகள் பற்றிப் பெருங்கூச்சல் போடும் உலக வல்லரசுகளின் ஆசியோடு இத்தகைய அரசியல் படுகொலைகள் தொடர்கின்றன.

ஒரே சமயத்தில் தலைமை முழுவதையும் இழந்தது, ஜே.வி.பி. இயக்கத்துக்கு ஒரு பெரும்சரிவு, பின்னடைவுதான். தேக்கமும், பிளவுகளும் கூட ஏற்படலாம். மிகப் பெரும் அளவு மக்கள் ஆதரவு இருந்தும் கூட தனிநபர் பயங்கரவாதத்தை மேற்கொண்டு சமூக பாசிச இயக்கமாக சீரழிந்து போனது அதன் இன்றைய பின்னடைவுக்கான முக்கியமான காரணமாகும். ஜே.வி.பி. இயக்கத்தின் அனுபவங்கள் எதிர்மறையானவை என்றாலும் புரட்சிகர அமைப்புகள் அவசியம் படிப்பினை பெற வேண்டியதாக உள்ளன.

◆ சோமநாதன்

(ஜே.வி.பி. இயக்கம் தரும் படிப்பினைகள் பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில்...)



படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

1-2

1-15 டிசம்பர்'89

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா:US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015


தொங்குநிலை நாடாளுமன்றம்:

# யாருக்கு வேண்டும் நிலையான ஆட்சி?

இதுவரை காணாத அளவு பெரும் பண விரயங்களும் அதிகார முறைகேடுகளும் மோசடிகளும் நிறைந்த, மிகவும் மூர்க்கமான - பலாத்காரமான நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் பாசிச ராஜீவ் கும்பல் ஆட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்டுவிட்டது. அதேசமயம் வேறு எந்தவொரு அரசியல் கட்சியோ கூட்டணியோ ஆட்சி அமைப்பதற்கான அளவு அறுதிப் பெரும்பான்மை பலம் பெறவில்லை.

காங்கிரசுக்கு மாற்று என்று சொல்லிக் கொண்ட ஜனதா தளத்தின் தலைமையிலான தேசிய முன்னணிதான் ஆட்சியைப் பிடிக்கும் அளவோடும் நம்பிக்கையோடும் போட்டியிட்டது. ஆனால் வடக்கே காங்கிரசு எதிர்ப்பு அலை வீசியதைப் போலவே தெற்கே தேசிய முன்னணி எதிர்ப்பு அலை வீசியது. இங்கே அதன் தூண்களான கருணாநிதி, ராமராவ், ஹெக்டே தலைமையிலான கட்சிகள் அடியோடு சரிந்தன. ஆகவே தேசிய முன்னணியும் பெரும்பான்மை பெற முடியாமல் போனது.

ஜனதா தளத்தைப் பிளவுபடுத்தி காங்கிரசு ஆட்சியோ, காங்கிரசைப் பிளவுபடுத்தி தனியே ஜனதா தளம் அல்லது தேசிய முன்னணி ஆட்சியோ அமைப்பதற்காக நடந்த முயற்சியும் பேரமும் முறிந்துபோயின. சிறுபான்மையானாலும் தேசிய முன்னணி ஆட்சி அமைப்பதற்காக நடந்த முயற்சியும் பேரமும் வெற்றிபெற்றுவிட்டன. அதற்கு வெளியிலிருந்து ஆதரவு தருவதாக பாரதீய ஜனதாவும் 'இடது' சாரி அணியினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். வி.பி.சிங் தலைமையிலான ஆட்சி விரைவிலேயே பதவியேற்கும். ஆனால் அதற்கு முன்பாகவே அச்சிறுபான்மை - கூட்டணி ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் என்கிற சந்தேகம் பெரிதாக எழுந்துவிட்டது.

சிறுபான்மை தேசிய முன்னணி ஆட்சி நீடிக்காது. உள் முரண்பாடு - பதவிச் சண்டை காரணமாக வீழ்ந்துவிடும் என்றே முதலாளித்துவ அரசியலாளர்கள் அஞ்சுகின்றனர். குறிப்பாக எல்லா விவகாரங்களிலும் இரு வேறு துருவங்களான போலிக் கம்யூனிஸ்டுகளையும், இந்து மத வகுப்புவாத பாரதீய ஜனதாவையும் சரிக்கட்டி சமாளித்துப் போவது சாத்தியமில்லை. எனவே அவை தாங்கிப் பிடிக்கும் தேசிய முன்னணி விரைவிலேயே வீழ்ந்துவிடும் என்று கருதுகிறார்கள். உடனடி எரியும் பிரச்சினை இருக்கவே இருக்கிறது ராமஜென்ம பூமி / பாபர் மசூதி விவகாரம். அதோடு ஏற்கனவே சூடுபிடித்துவிட்ட ஜனதா தளத்துக்குள் நடக்கும் பதவிச் சண்டை, அடுத்த ஜனவரியில் வரவிருக்கும் பல வடமாநில சட்டமன்றத் தேர்தல்களும் வெற்றிவாய்ப்புகளும் காரணமாகத் தீவிரமடையும்.

இதற்குத் தூபம் போடுவதற்காகத்தான் ஏற்கனவே ராஜீவ் ஆதரவு தரகு அதிகார முதலாளிகளின் கும்பல் ஒன்று பெரிய பணமூட்டையோடும் சந்திராசாமி போன்ற பரிவாரங்களோடும் புதுடில்லியில் முகாமிட்டுள்ளது. ஜனதா தளத்தில் பதவிச் சண்டை முற்றி தேசிய முன்னணி ஆட்சி கவிழவேண்டும்; காங்கிரசால் மட்டுமே நிலையான ஆட்சி அமைக்க முடியும் என்று மீண்டும் நிரூபிக்கப்பட வேண்டும்; அப்போதுதான் 1980ல் இந்திரா ஆட்சிக்குத் திரும்பியதைப் போல தானும் சாதிக்க முடியும் என்று ராஜீவ் கும்பல் காத்திருக்கிறது. அதேசமயம் காங்கிரசுக்கு மாற்றாக தாமும் ஒரு நிலையான ஆட்சியை தரமுடியும் என்று நிரூபித்து உறுதியாகக் காலூன்றவே தேசிய முன்னணியும் அதன் ஆதரவுக் கட்சிகளும் முயலுகின்றன.

எந்தவொரு கட்சியோ, கூட்டணியோ தனிப்பெரும்பான்மை பெறாதபோது 'தொங்குநிலை நாடாளுமன்றம்' என்று அதை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த நிலையை உருவாக்கி, நிலையான ஆட்சி அமைக்க முடியாதவாறு வாக்களித்ததாக மக்கள் மீதே அவர்கள் பழிதூற்றுகின்றனர்.

ஆனால் இப்படி நிலையான ஆட்சி அமைக்க முடியாதவாறு தொங்குநிலை நாடாளுமன்றம் உருவாவது இப்போது மட்டுமோ, இங்கு - இந்தியாவில் மட்டுமோ விதிவிலக்காக நேர்வது அல்ல. முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை உள்ள அனைத்து நாடுகளிலும் தவிர்க்க முடியாதவாறு இந்தக் கட்டம் - நெருக்கடி உருவாகும் என்றே உலகம் முழுவதுமான அனுபவங்கள் காட்டுகின்றன. முதலாளித்துவ ஜனநாயகத்தைப் போற்றும் மேல்ல நாடுகள் அனைத்திலும் உள்ள நாடாளுமன்றங்களில் ஓரிரு உறுப்பினர் வித்தியாசத்தில் ஊசலாடுகின்றன. அல்லது எந்தக் கட்சியும் பெரும்பான்மை, அறுதிப் பெரும்பான்மை பலம் பெற முடியாமல் கூட்டணி ஆட்சிகள் அமைவதும் கவிழ்வதும், ஆண்டுக்கு இரண்டு, மூன்று தேர்தல்களும் நடக்கின்றன.

ஏகாதிபத்தியப் போர் வெறியிலும், இன - நிற வெறியிலும் நாட்டை மூழ்கடித்துத் தான் தாட்சர், ரீகன் போன்றவர்கள் கணிசமான காலம் நிலையான ஆட்சி நடத்த முடிகிறது. ஜனாதிபதி ஆட்சிமுறை உள்ள நாடுகளில்கூட் தேர்தல்கள் மூலம் தனி நபர் சர்வாதிகாரம் நிறுவப்படும் அதேசமயம் 'மக்களின் நேரடிப் பிரதிநிதிகள்' பங்கேற்கும் நாடாளுமன்றங்களில் எதிர்த்தரப்பினரே பெரும்பான்மை பெற்று தொடர்ந்து அரசியல் நெருக்கடி நிலவுகிறது. அதோடு நாடாளுமன்றத்துக்கே தெரியாமல் ஈரான் - காண்டிரா போன்ற சதிவேலைகள் நடத்தி ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாகவும் போலித்தனமாகவும் மாற்றிவிடுகின்றனர்.

அடுத்தடுத்த தேர்தல்களில் ஆட்சிக்கு வரும் கட்சிகளின் யோக்கியதைகளை மக்கள் புரிந்து கொண்டு அவற்றை நிராகரித்து விடுகின்றனர். பல்வேறு ஏகபோக முதலாளித்துவ கும்பல்களை அரசியல் கட்சிகள் பிரதிநிதித்துவப் படுத்துவதால் தவிர்க்க முடியாத முரண்பாடுகள் எழுகின்றன. எனவே 'தொங்குநிலை நாடாளுமன்றம்' ஒரு நிரந்தர நோயாகி விடுகிறது. இந்த நோய்க்கு மருந்தாகச் சொல்லப்படும் இரண்டு கட்சி ஆட்சி முறை உள்ள நாடுகளில் கூட, அக்கட்சிகளுக்

படிப்பகம்

www.padippakam.com




புதிய ஆட்சி எப்படியிருக்கும் என்று முதலாளித்துவ பத்திரிக்கை 'இந்து' வெளியிட்டுள்ள கருத்துப்படம்.

குள்ளே குழுச் சண்டைகள் தோன்றி மீளமுடியாத அரசியல் நெருக்கடிக்குள் அவை சிக்கிக் கொள்கின்றன. இப்படிப்பட்ட 'ஜனநாயக'த்தைத தான் தனது பிரிட்டிஷ் எஜமானர்களிடமிருநது காந்தியவாதிகள் வரித்துக் கொண்டுள்ளார் கள்.

'தொங்கு நிலை நாடாளுமன்றம்' என்று முதலாளித்துவ அரசியல்வாதிகள் நாசுக்காகக் கூறும் நிலைதான் நாடாளுமன்ற அராஜகத்தை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக பதவிவெறி, கட்சி மாறுவது, பேரங்கள் - வியாபாரங்கள் நடத்தி ஆட்சி அமைப்பது, பிறகு கவிழ்ப்பது ஆகிய அனைத்து அரசியல் அசிங்கங்களும் நடக்கிறது. குறிப்பாக பல்வேறு ஏகாதிபத்தியங்களை ஆத ரிக்கும் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்கள் என்றும் பல்வேறு தேசிய இன, மத, சாதியி னர் என்றும் பிளவுகள், பிரி வுகள், முரண்பாடுகள் நிலவும் இந்தியா போன்ற நாடுகளில் அரசியல் பொறுக்கித்த னம், கிரிமினல் குற்றமாகி நாடாளுமன்ற அரா ஜகம் உக்கிரமாகவே நடக்கும். இங்கே இவ்வ ளவு காலம் தாக்குப் பிடித்து நின்றதற்குக் கார ணமே காங்கிரசு, நேரு பரம்பரை யின் மீது உரு வாக்கப்பட்ட பிரமைதான். அதை எதிர்த்து நிற் கும் வலுவான சக்திகள் தலைதூக் கிய போதெல்லாம் நாடாளுமன்ற அராஜகம் நடப்பதைப் பார்க்கிறோம்.

தொங்குநிலையானாலும், தெளிவான - தொங்கா நிலையானாலும் எந்தக் கட்சியோ, கூட் டணியோ, ஆட்சி அமைத்தாலும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக மூடுதிரையின் பின்னே அதிகார வர்க்க, போலீசு, இராணுவம் என்ற அரசு இயந்திரம் இருந்துகொண்டு நிரந்தர மாக நிர்வாகத்தை நடத்துகிறது. அதைக் கொண்டு ஆளும் வர்க்கங்கள் தமது அடக்கு முறை, சுரண்டலை நடத்தி வருகின்றன. இந்த அரசியல் -பொருளாதார ஏற்பாடு தொடர்வதற்குத் தடையாகிவி டும் அளவு நாடாளுமன்ற அராஜகம் முற்றும்போது பாசிச / இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவவும் அவர்கள் தயங்கமாட்டார்கள். இது முதலாளித்துவ ஜனநாயக அரசியலின் தர்க்க ரீதியான, தவிர்க்க முடியாத அங்கமாகவே உள்ளது. ஆகவே தொங்கு நிலையில் இருப்பது நாடாளுமன்றம் மட்டுமல்ல, முதலாளித்துவ ஜனநாயக அரசியல் அமைப்பு முழுவதுமேதான்!

நிலையான ஆட்சி என்ற பெருங்கூச்சலைக் கிளப்பி, பயபீதியூட்டி அரசியல் ஆதாயம் தேடவே பாசிச ராஜீவ் கும்பல் முயன்றது. எங்களாலும் அதைச் சாதிக்க முடியும் என்கிற தோர ணையில்தான் மற்ற பிற ஓட்டுக் கட்சிகளும் நிரூபிக்க முயலுகின்றன. யாருக்கு வேண்டும் நிலை யான ஆட்சி? நமது நாட்டு மக்களுடைய வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதற்கோ, அல் லது இன்றைய நிலைமையாவது சரிந்து விடாமல் தடுப்பதற்கோ எந்தவொரு ஓட்டுக் கட்சியின் நிலையான ஆட்சியாவது பயன்படுமா? தற்போதைய அரசியல் பொருளாதார அமைப்பு நீடிக்கும் வரை நிலையான ஆட்சி என்பது உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காக ஆளும் வர்க்கங்களுக்குத் தான் பயன்படும்.

ஆகவே நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதில் உழைக்கும் மக்களுக்கு எவ்வித அக்கறையும் தேவையில்லை. இந்த அரசியல் பொருளாதார அமைப்புக்குள்ளாகவே தீர்வுக ளைத் தேடி முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. அதற்குள்ளாகவே முடங்கிக் கொண்டு, சிறைகிடக்க வேண்டிய அவசிய மில்லை. அடுத்தடுத்த தேர்தல்களில் மக்களை ஏய்த்து ஆட்சிக்குப் போய், மக்களையே கொள் ளையடிக்கும் ஓட்டுண்ணி, இடைத்தரகர் கூட்டமான ஓட்டுக் கட்சிகளையும் அவற்றுக்குப் பின்னி ருந்து இயங்கும் ஆளும் அதிகார வர்க்கக் கூட்டத்தையும் ஒழித்துக்கட்ட வேண்டும். தமக்குப் பயன்படாத, தமக்கு எதிரான இந்த அரசியல், பொருளாதார அமைப்பையே தூக்கியெறிந்து விட்டு தமக்கு அவசியமான மாற்று அமைப்பை நிறுவிக் கொள்ள வேண்டும். கிராமங்கள் மற் றும் தொழிற்சாலைகள் மட்டத்திலிருந்து உழைக்கும் மக்களே நேரடி நிர்வாகம் செலுத்தும் ஒரு புதிய ஜனநாயக அமைப்பு முறைதான் தேசிய ஒருமைப்பாடு முன்னேற்றத்துடன் கூடிய நிலையான ஆட்சியாக அமையும். ■

# ஈழத் அழிவு

ஈழ துரோகிகளின் இறுதிக்காலம் வந்துவிட்டது. ஒன்று அவர்கள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தோடு சேர்ந்து மூட்டைக் கட்டிக் கொண்டு வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிவிட வேண்டும். அல்லது ஈழ மண்ணிலேயே பூண்டோடு அழித்தொழிக்கப்படுவார்கள். ஈழ துரோகிகளின் எஜமானர்களான பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சி இந்தியப் பொதுத் தேர்தல்களில் தூக்கி எறியப் பட்டு விட்டது. இது அவர்களின் வீழ்ச்சியை விரைவுபடுத்தி விட்டது.

ஈழத்தின் எட்டப்பர்களுக்கு ஏற்படும் இந்த இறுதி முடிவு குறித்து ஈழ மக்கள் எவரும் வருந்தப் போவதில்லை. ஏனெனில் அந்நிய, ஆதிக்க, ஆக்கிரமிப்புப் படைக்கு தாயகத்தைக் காட்டிக் கொடுத்து சொந்த சகோதரர்களை படுகொலை செய்யவும், சொந்தச் சகோதரிகளையே கற்பழிக்கவும் துணை போனவர்கள். ஆக்கிரமிப்புப் படையினர் வெளியேற வேண்டிய நிர்பந்தம் எழுந்தபோதும் அதை எதிர்த்ததோடு, ஈழத்தையே இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் நோக்கத்தோடு தேசத்துரோகக் கொலைகாரப் படையெழுப்பினார்கள்.

இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறுவதாக கெடுவைத்து பிரேமதாசா கும்பலுடன் ஒப்பந்தம் போட்டபோது கூட எழுதினோம்: இதை நம்பக்கூடாது; ஏதாவது ஒரு முகாந்திரத்தை முன்வைத்து இந்திய இராணுவம் தங்கியிருக்கவே முயலுகிறது; இந்தியாவின் முன்னாள் இராணுவத்தினரை ஆள் சேர்த்து இரகசியப்படை திரட்டுகிறது; இந்திய ஆலோசகர்கள் என்கிற பெயரில் அவர்களை ஈழத்துக்கு அனுப்பி ஈழ துரோகிகளின் ஆணையில் இயங்கும் இரகசியக் கொலைப்படை ஒன்றைத் திரட்டுகிறது. (அக். 1-15 '89 புதிய ஜனநாயகம்)

பிறகு இதை உறுதிப்படுத்தும் வகையில் "தமிழ் தேசிய இராணுவம்' என்ற இராணுவத்தை இந்திய ஆக்கிரமிப்புப் படையின் பயிற்சி, ஆயுதங்களைக் கொண்டு ஈழத் துரோகிகள் உருவாக்கி வருகிறார்கள். அதற்காக ஈழச் சிறுவர் - சிறுமிகளைப் பலாத்காரமாகக் கடத்திக் கொண்டு போகிறார்கள்'' என்று புலிகள் குற்றஞ்சாட்டினர். பலநாட்டுப் பத்திரிக்கையாளர்களும் இதை உறுதி செய்தனர். தமிழ் தேசிய இராணுவத்தில் சேரும்படி ஈரோஸ் அமைப்பினரை மிரட்டுவதாக அவர்கள் புகார் கூறினர். இதையெல்லாம் மறுத்து ''அப்படி ஒரு இராணுவமே கிடையாது; இருப்பதெல்லாம் சட்டப்பூர்வமாக இயங்கும் குடிமக்கள் தொண்டர் படைதான்; அதனிடமிருப்பது இலங்கை அரசு கொடுத்த சாதாரண துப்பாக்கிகள் தாம் என்று . துரோகிகளின் அதிகாரப்பூர்வத் தலைவர் வரதராஜப் பெருமாள் புளுகினார்.

கடந்த மாதம் அம்பாறை மாவட்டத்தை விட்டு இந்திய இராணுவம் வெளியேறியது. அங்கே அக்கறைப்பட்டு பகுதி



படிப்பகம்

www.padippakam.com

# துரோகிகளின் நெருங்குகிறது!

யில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். மற்றும் டெலோவுக்குச் சொந்தமான இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர். 60க்கும் மேற்பட்ட துரோக இராணுவத்தினனரைக் கொன்று, 140 பேரை சிறைப் பிடித்ததோடு, எட்டு லாரி நிறைய ஆயுதங்களைப் பறித்தெடுத்தனர். அப்போதும் தமிழ் தேசிய இராணுவம் என்பதே கிடையாது; தாக்கப்பட்டது குடிமக்கள் தொண்டர் படைதான் என்று வரதராஜப் பெருமாள் சாதித்தார்.


அதன்பிறகு அம்பாறை மாவட்டத்தில் யாருடைய ஆதிக்கத்தை நிறுவுவது என்பதற்கான மோதல் ஏற்பட்டது. அக்கறைப் பட்டு மற்றும் கல்முனையில் நிறுவப்பட்ட இலங்கை இராணுவ போலீசு அதிரடிப்படை முகாம்களை தமிழ் தேசிய இராணுவம் நவீன ஆயுதங்களைக் கொண்டு தாக்கி 75 பேரைப் பலி கொடுத்து 250 பேரைக் கொன்றது. இந்திய இராணுவம் வெளியேறும் முன்பு சட்ட விரோத, இரகசிய இராணுவத்தை உருவாக்கி பயிற்சியும் நவீன ஆயுதங்களும் வழங்கியதாக இலங்கை அரசு புகார் கூறியது. அப்போதும் அதை அடியோடு மறுத்தனர் இந்திய அரசும், ஈழத் துரோகிகளும். ஆனால் மேற்கண்ட சம்பவங்களை அறிவித்த இந்தியப் பத்திரிக்கைகள் இந்தியாவின் நாசகார சதிவேலைகளைப் பற்றிப் பெருமையோடு எழுதி வருகின்றன.

இந்தியாவின் இலங்கை ஆக்கிரமிப்புக் கொள்கைகளை முழுமூச்சாக ஆதரிப்பது 'இந்து' நாளேடு. அதன் மாதமிருமுறை ஏடான 'ஃபிரண்ட் லைன்' (நவ. 11-24) பின்வருமாறு எழுதுகிறது. ''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கும் இறுதிக் கட்டமாக வடகிழக்கு மாகாண அரசைப் பாதுகாப்பதை உறுதி செய்வது இந்தியாவின் முக்கியக் கொள்கையாக இருந்தது. இதற்காக பெருமளவு கட்டாய ஆள் சேர்ப்பு மூலம் குடிமக்கள் தொண்டர் படை மற்றும் தமிழ் தேசிய தொண்டர் படை ஆகியவற்றை உருவாக்கியது. இவற்றிலே குடிமக்கள் தொண்டர்படை போலீசைப் போல உடையணிந்தது; சட்டபூர்வமானது; இந்திய அமைதிப் படை வெளிப்படையான பயிற்சியளித்தது. ஆனால் தமிழ் தேசியத் தொண்டர் படை இரகசியமானது; இந்திய அமைதிப்படைக்கு பதிலாக 'இந்திய ஆலோசகர்களால் பயிற்சியளிக்கப்படும் சட்ட விரோதமானது; மிகவும் அபாயகரமான தாக்குதல் சக்தியுடையது; ஒளிந்து வாழும் இராணுவ உடுப்புகளும், ஏ.கே.47, ஏவுகணைகள் போன்ற அதிநவீன ஆயுதங்களை ஏந்தியிருப்பது. ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.என்.டி.எல்.எஃப்., டெலோ ஆகிய மூன்று புலிகள் எதிர்ப்பு அமைப்புகளின் கூட்டுத் தலைமையில் இயங்குகிறது. இவ்விரு படைகளுமே இந்திய இராணுவத்தைப் போலவே அணிவகுப்பு மரியாதை செலுத்தி இந்தி மொழி ஆணைகளுக்குப் பழக்கப்பட்டவர்கள். அம்பாறையில் இருந்து இந்தியாவின் மலை பிராந்தியப் படை விலகிய பிறகு இவ்விரு படைகளும்தான் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன''

இப்படி அவர்களின் ஊதுகுழல்களே ஒப்புக் கொண்டுள்ளபோதும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களின் எடுபிடிகளும் ''தமிழ் தேசிய இராணுவம் என்று எதையும் உருவாக்கி, பயிற்சியும் ஆயுதமும் தரவில்லை'' என்று அடியோடு புளுகுகின்றனர். ஆனால் இந்தப் புளுகெல்லாம் அவர்களின் வீழ்ச்சியைத் தடுத்துவிட முடியாது. ஈழத் தமிழரின் எதிரியான இலங்கை இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து புலிகள் தம்மைத் தாக்குவதாகக் கூறி அவர்களின் ஆதரவைத் திரட்டிக் கொண்டுத் தாக்குப் பிடித்துவிட முடியும் என்று ஈழத் துரோகக் குழுக்கள் நம்புகின்றன.

இனப் படுகொலைப் போர் தொடுத்து பல ஆயிரம் ஈழத் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் அதை விடக் கொடிய ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து மேலும் பல ஆயிரம் ஈழத் தமிழர்களை இந்திய இராணுவம் கொன்றது. இந்திய - இலங்கை பாசிச கும்பல்களுடன் கூட்டுச் சேர்ந்து அதற்குத் துணை போனவர்கள்தான் இந்த ஈழத் துரோகக் குழுவினர். பிறகு இவ்விரு ஆளும் கும்பல்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றி, இரண்டு எதிரிகளை எதிர்த்து ஒரே நேரத்தில் போரிட முடியாத போது மிகவும் அபாயகரமான, உடனடி, அந்நிய எதிரிக்கு எதிராக உள்நாட்டு எதிரியுடன் தற்காலிகக் கூட்டு ஏற்படுவது தவிர்க்க முடியாதது; அவசியமானது. இதை ஈழத் தமிழர்கள் நன்கறிவர். அந்நிய எதிரியோடு துரோகிகளையும் ஒழித்துக் கட்டுவதற்காகப் போரிடுவர் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், கடந்த காலங்களில் செய்ததைப் போல தமது குழுவின் தனிப்பட்ட நலன்களுக்காக பேரங்கள் பேசி இலங்கையின் ஆளும் பிரேமதாசா கும்பலிடம் புலிகள் சமரசம் செய்து கொண்டு ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடகு வைப்பார்களானால், மற்ற பிற ஜனநாயகப் போராளி குழுக்களை தடை செய்து ஒழித்துக் கட்ட புலிகள் முயல்வார்களானால் என்ன செய்வது? புலிகளுக்கும் எதிராகவே திரும்பி போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர ஈழத் தமிழர்களுக்கு வேறு வழியில்லை. ●






படிப்பகம்

www.padippakam.com



புதிய ஜனநாயகம் இதழ் வளர்ச்சிக்காக ம.க.இ.க; வி.வி.மு. திரட்டிய நிதியை தோழர்கள் மாது, மருதையன் அளிக்க ஆசிரியர் பெற்றுக் கொள்கிறார்.

# "புதிய ஜனநாயகம்" ஐந்தாம் ஆண்டுவிழா!

நவம்பர் 7; உலகத்தின் தோற்றத்தை மாற்றியமைத்த பூவுலகின் முதல் சோசலிச புரட்சி நாளன்று தஞ்சை நகரப் பேருந்து நிலையம் அருகிலுள்ள ராமநாதன் செட்டியார் மண்டபத்தில் புதிய ஜனநாயகம் இதழின் 5ஆம் ஆண்டுவிழா மாலை 6 மணிக்கு எழுச்சியோடு துவங்கியது.

புதிய ஜனநாயக பத்திரிக்கையின் தோழமை அமைப்புகளான மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, பகத்சிங் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் ஒரு தாயின் அரவணைப்போடு விழாவின் வெற்றிக்கு முழுவதுமாக துணைநின்றன.

இத்தோழமை அமைப்புகள் தமிழகம் முழுவதும் தங்களது சக்தியை ஒன்று குவித்து ஏறக்குறைய ஒரு மாத காலம் பல வடிவங்களில், கடந்த 4 ஆண்டுகாலம் புதிய ஜனநாயகம் ஆற்றிய கடமைகளை மக்களிடம் எடுத்துச் சென்றன. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும், புரட்சிகர அமைப்புகளின் தோழர்களும், புதிய ஜனநாயகத்தின் தனிப்பட்ட வாசகர்களும், ஜனநாயக சக்திகளும் என 500க்கும் மேற்பட்டோர் ஆர்வமுடன் திரண்டிருந்தனர்.

புதிய ஜனநாயக ஆசிரியர் குழு சார்பாக, ஆசிரியர் மதியழகன் விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்று திருவோணம் ஒன்றிய வி.வி.மு.அமைப்பாளர் தோழர் துரைமாணிக்கத்தை கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தி தரும்படி கேட்டுக் கொண்டார். உலகம் முழுவதுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக தங்களது இன்னுயிரை ஈந்த தியாகிகளுக்கு வீரவணக்கத்தோடு கூட்டம் ஆரம்பமானது.

தோழமை அமைப்புகளின் சார்பாக, ம.க.இ.க. மாநில இணை செயலர் தோழர் கதிரவன், ம.க.இ.க. மாநில பொருளாளர் தோழர் காளியப்பன் வி.வி.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மாது, பகத்சிங் இளைஞர் முன்னணி திருச்சி நகரச் செயலர் தோழர் ஜெகதீசன் ஆகியோர் வாழ்த்து கூறினர். 'புரட்சிகர அமைப்பின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய புதிய ஜனநாயகம் புரட்சிகர ஏட்டிற்கு எமது அமைப்புகள் எப்போதும் துணை நிற்கும்' என்று உறுதியளித்தனர்.

வாழ்த்துரையை ஏற்று நன்றி தெரிவித்த புதிய ஜனநாயகம் ஆசிரியர் 'புரட்சிகர அமைப்புகளின் நம்பிக்கைக்கு புதிய ஜனநாயகம் தனது இறுதிமூச்சு வரை கடமையாற்றும்' என்று பிரகடனப்படுத்தினார். மேலும், அவர் தனது உரையில், 'ஆளும் வர்க்கங்கள் கூறும் எல்லோருக்கும் கருத்து சுதந்திரம் என்பது எவ்வளவு போலியானது என்பதையும் அவ்வர்க்கங்களின் சர்வாதிகாரத்திற்கு துணை நிற்கும் கருத்துகளுக்கே முழு சுதந்திரம்' என்றும் எடுத்து கூறினார். சிறப்புரையாற்றிய ம.க.இ.க. இணை செயலர் தோழர் கதிரவன், 'மக்களுக்கு எதிரான ஆளும் வர்க்கக் கருத்துக்கள் எப்படி மக்களின் கருத்துக்களாக திணிக்கப்படுகிறது' என்பதை விளக்கினார்.

கூட்டத்தின் முடிவில், புதிய ஜனநாயகம் ஏட்டின் உள்ளடக்கம் பற்றியான வாசகர்களின் கேள்விகளுக்கும், ஐயங்களுக்கும் ஆசிரியர் பதிலளித்தார். குறிப்பாக, ஈழப் பிரச்சனையில் புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடு பற்றியும், இந்திய அரசியலில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களை ஏன் முதன்மையாக

# அதிகார வர்க்கத்தின் அட்டூழியம்!



உண்ண உணவில்லாமலும், உடுக்கக் கூட உடையில்லாமலும், குந்தக் கூட இடமில்லாமலும் வாழ்ந்துவரும் கோடிக் கணக்கான உழைக்கும் மக்களில் சீர்காழி தாலுக்கா, நாங்கூர் கிராமத்திலிருக்கும் கூலி விவசாயத் தொழிலாளர்களும் அடங்குவர்.

காவிரி தொடர்ந்து காய்ந்து விட்டதால் இவர்கள் வயிறும் தொடர்ந்து காய்ந்து அரைவயிற்று சோற்றுக்காக எங்கே வேலைகிடைக்கும் என்ற கேள்விக்குறியுடன் வாழ்ந்து வருபவர்கள். தனியுடைமை கொடுமை நிறைந்த இம் மண்ணில் விலை கொடுத்து வாங்க தகுதியற்ற நாங்கூர் வாழ் தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலிகள் கடந்த ஒரு வருட காலமாக புறம்போக்கு நிலத்தில் 22 குடும்பங்கள் குடிசைப்போட்டு தங்களுக்கும் வீடு இருக்கிறது என்ற பெயரில் வாழ்ந்து வந்தனர்.

சேரிகளிலும் சகதிகளிலும் கிடந்த இவர்களுக்கு வீடு ஒரு கேடா? என்ற கேள்வி இவர்களை காலம் காலமாக அடிமைப்படுத்தி தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிவைத்த நாங்கூரைச் சேர்ந்த சாதிவெறியர்களான பாலுபிள்ளை, நாராயணன் போன்றவர்களுக்கு ஏற்பட்டது. அதிகார வர்க்கத்தின் துணையுடன் அக்குடிசைகளைப் பிரித்தெறிய முற்பட்டனர்.

அதன்படி, அரசு நிலங்களை கையகப்படுத்துவதிலும், கட்டிய குடிசைகளைப் பிரித்தெறிந்து இடிப்பதிலும் 'தனக்கு நிகர் யாருமில்லை' என்று பறைசாற்றிக் கொள்ளும் தாசில்தார் கிருஷ்ணசாமி 12.10.89 மாலை காவல்துறை உதவியுடன் 22 வீடுகளையும் பிரித்து இடித்து நாசப்படுத்தி தனது அதிகார வர்க்கத்தின் திமிர்தனத்தை அகங்காரத்துடன் நிலைநாட்டியுள்ளார்.

இந்த கொடுமைக்கு ஆளான மக்கள் வேத



படிப்பகம்

www.padippakam.com

எடுத்து புரட்சியை விரைவாக சாதிக்கக் கூடாது? என்பது பற்றியும், புரட்சிகர குழுக்கள் சிதறி இருக்கும் இச்சூழலில் ஒன்றுபட்டு புரட்சியை சாதிப்பது எப்போது போன்ற கேள்விகளையும், புதிய ஜனநாயகம் இன்னும் செழுமையான முறையில் வெளிவருவதற்கான ஆலோசனைகளையும் வாசகர்கள் ஊக்கமும் உயிரோட்டமுமாக விவாதத்தை துவக்கினர். ஆசிரியர், 'ஆம்' 'இல்லை' என்ற ரீதியில் இவைகளுக்கு பதில் அளித்தது சற்று சோர்வூட்டியது. (கேள்விகளுக்கு விரிவான, முழுமையான பதில்தரும் பொருட்டும், மற்ற புதிய ஜனநாயக வாசகர்களுக்கும் அது பயன்படும் என்ற நோக்கிலும் இந்த இதழிலிருந்து அதற்கான பதில்களைத் தொடர்ச்சியாக தருகிறோம்)

கூட்டத்தின் இடையே புரட்சிகரப் பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்தன. தோழமை அமைப்புகள் தங்கள் சார்பாக புதிய ஜனநாயக வளர்ச்சி நிதியாக தமிழகம் முழுவதும் உழைக்கும் மக்களிடம் திரட்டிய ரூபாய் 30,000ஐ ஆசிரியரிடம் வழங்கினர்.

குறிப்பாக ம.க.இ.க. தோழர்கள் புதிய ஜனநாயகம் 5 ஆண்டு விழாவைப் பற்றி தஞ்சை நகரத்தில் எடுத்துச் சென்ற வீச்சான பிரச்சாரமும், அரங்கத்தில் பெரிதாக வரைந்து வைத்திருந்த புதிய ஜனநாயகத்தின் அட்டைப்பட கார்ட்டூன்களும், மார்க்சிய ஆசான்களின் ஓவியங்களும் நிகழ்ச்சிக்கு மெருகூட்டின.

ஐந்தாமாண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகம், அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் புரட்சிகர அமைப்புகளின் - வாசகர்களின் நல்லாதரவுடன் தனது புரட்சிப் பணியைத் தொடரும் என்று ஆசிரியர் உறுதிகூற, ஏறக்குறைய இரவு 11.30 மணியளவில் சர்வதேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

ளையுடன் கண்ணீர் வடித்து கைக்குழந்தைகளுடன் குட்டிச் சுவர்களுக்கிடையே வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

இந்த அவலநிலைக்கு தீர்வுகாண திருவாலி ஊராட்சித் தலைவர் தங்கையன், சின்னப் பெருந்தோட்டம் தமிழ்மணி, மேல நாங்கூர் பன்னீர் செல்வம் போன்றவர்களும் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களும் சீர்காழி தாசில்தாரை கண்டித்து 30.10.89 அன்று உண்ணாவிரதமிருந்து மனு கொடுத்தனர். ஆனாலும் இதுவரை, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

22 குடும்பங்களை அவலநிலைக்கு ஆளாக்கிய சீர்காழி தாசில்தார் அவர்களே!

சீர்காழி தாலுக்காவில் ஏக்கர் கணக்கில் புறம்போக்கு நிலங்களை வளைத்து ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வரும் மிட்டாமிராசுகளிடமிருந்து நிலங்களை கையகப்படுத்த தயாரா?

புறம்போக்கு இடங்களில் மாட மாளிகைகளையும் கட்டி அனுபவித்து வரும் பணக்காரர்களின் வீடுகளை இடித்தெறிய தயாரா?

தகவல்:
என். அம்பிகாபதி, சீர்காழி




"நாம் புரட்சிக்கு அணி திரள்வோம்; புரட்சி ஒன்றே புது வாழ்வளிக்கும்" — [illegible]

## ஏகாதிபத்திய எதிர்ப்பு எரிமலையின் சீற்றம்!

[illegible]



படிப்பகம்

www.padippakam.com




காங்கிரசுக் கட்சி, அரசு விமானங்களில் பறக்க, எதிர்க்கட்சிகள் ரதங்களில் பறக்கிறார்கள்

# இந்திய ஜனநாயகத்தின் இன்றைய விலை ரூ.10,000 கோடி!

கொள்ளை நோய் போன்று நாட்டை உலுக்கிய தேர்தல் கால ஜுரம் ஒருவாறு இறங்கியிருக்கிறது.

குழைந்தும், நயந்தும், வளைந்தும், பூச்சாண்டி காட்டியும், பீதியூட்டியும், மிரட்டியும், பிரமிப்பூட்டியும், கோமாளித்தனமாகவும், குரூரமாகவும், வாஞ்சையாகவும், வக்கிரமாகவும், புளுகியும், ஏமாற்றியும், நரித்தனமாகவும், நாய்தனமாகவும், ஆசைக்காட்டியும், அதிர்ச்சியூட்டியும் மக்களிடமிருந்து ஓட்டுக்களை உருவிக் கொண்டு ஓடிவிட்டார்கள்.

இமயம் முதல் இந்துமாக்கடல்வரை அந்தமான் தீவு முதல் அரபிக் கடல்வரை தரையிலும் விமானத்திலும் பறந்து, படகிலும், பல்லக்கிலும் சென்று காட்டுக் கூச்சல் போட்டார்கள். பெரும்புழுதியை கிளப்பினார்கள்.

இதற்கு அடிமை காலம் முதல் 'ஆன்டனா' காலம் வரை உள்ள அனைத்து தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தினார்கள்.

இதற்காக 10,000 கோடி ரூபாயை பட்டாசாக வெடித்தார்கள். இது அவர்களே தரும் கணக்கு! நவம்பர் மாதம் வந்த 'புரோப்' 'ஆன்லூக்கர்' 'சண்டே', 'வீக்', 'பிசினஸ் இந்தியா', இன்னும் ஏராளமான ஆங்கில பத்திரிக்கையில் இதற்கான கணக்குகளை நீங்கள் பார்க்கலாம்!

★ பாசிச ராஜீவ் போட்டியிட்ட அமேதி தொகுதிக்கு மட்டும் தேர்தல் வேலைகளுக்காக புதிதாக வாங்கப்பட்ட 200 மாருதி ஜீப்புகள் அனுப்பப்பட்டது. "தேர்தலுக்கு 10 நாட்களுக்கு முன்பு இன்னும் வரும்" என்று ஒரு காங்கிரசு 'ஊழியர்' பெருமையோடு சொன்னாராம்!

★ வி.பி.சிங் போட்டியிட்ட பதேபூர் தொகுதியில் மட்டும் காங்கிரசு சுவரெழுத்து எழுதுவதற்கு செய்த செலவு 1.5 லட்சம் ரூபாய்.

★ "என் நாடித் துடிப்பெல்லாம் இந்திய நலனுக்கே" என்ற வரிசையில், உள்ளூர், தேசிய, மொழிகளில் வரும், தினசரி, வார, இருவார, மாத இதழ்களில் வந்த விளம்பரங்களுக்கு மட்டும் காங்கிரசு செய்த செலவு 40 கோடி ரூபாய் (கோடி என்பது 100 லட்சம் என்பதை நினைவில் கொள்க!)

★ நெற்றியில் வைத்துக் கொள்ளும் கைசின்னப் பொட்டிலிருந்து, பனை உயர கட்அவுட் வரை, அதன் நடுவில் உள்ள பல சைஸ் போஸ்டர், பிரசுரம், பேட்ஜ், கொடி, பேனர், இவற்றுக்காக் காங்கிரசு செய்த செலவு சுமார் 140 கோடி ரூபாய்! ஒரு மணி நேரம் திரையில் ஓடும் 'ரீ டிப்யூஷன்' விளம்பர நிறுவனம் தயாரித்த ராஜீவின் புகழ்பாடும் வீடியோ படம், 600 பிரதிகளுடன்.

★ ஜனதாதளம் போட்டியிட்ட 315 தொகுதிகளில், தேவிலால், அருண்நேரு, அஜய் சிங், சந்திரசேகர், வி.பி.சிங் ஆகியோர் தங்களுடைய வேட்பாளர்களுக்கு தனித்தனியாக, பிரச்சாரத்தை முடுக்கிவிட்டனர். இவர்கள் ஆளுக்கு 50க்கும் மேற்பட்ட ஜீப்புகளையும், கார்களையும் தங்கள் வேட்பாளர்களுக்கு பயன்படுத்தினர். இவர்கள் தனித்தனியாக வரலாற்று நாயகன், இரும்பு தலைவர், இன்னொரு வினோபா என்று வீடியோ படங்களை தயாரித்து சுற்றுக்கு விட்டனர். வி.பி.சிங் தனக்கென்று தனியாக, 'சந்தோஷ் பரத்தியா' என்ற பத்திரிக்கையாளரை வைத்து, கும்பமேளாவுடன் கூடிய ஜனரஞ்சகமான வீடியோ படத்தை தயாரித்தார்.

தேவிலாலும் என்.டி.ஆரும், அரசு செலவிலேயே தங்களுக்கு வீடியோ படம் எடுத்து புகழ் பரப்பினர். காங்கிரசு கொலைகாரன் எச்.கே.எல்.பகத் தனக்காக ஒரு தியாகியின் பயணம் என்ற வீடியோ படத்தை தயாரித்தான். ஓயி ஓயி பி.ஜே.பி; ஆயி ஆயி காங்கிரசு என்று பெரும் பொருட் செலவில் பாரதீய ஜனதாக் கட்சி 80 நிமிடம் ஓடக் கூடிய வீடியோ படத்தை தயாரித்து 1000 பிரதிகள் எடுத்து இந்தியா முழுக்க அனுப்பியது.

இவை இல்லாமல் தனியாக, எல்.கே. அத்வானி, விஜயராஜி சிந்தியா ஆகியோர் தங்கள் பெருமை பேசும் தனி வீடியோ படங்களை எடுத்து சுற்றுக்கு விட்டனர். சதீஷ் சர்மா, கல்பனநாத்ராய், ஜோதிபாசு அனைவரும் வீடியோவின் மூலம் புதுமையான முறையில் மக்களிடம் ஊழலை எதிர்த்து நெருப்பு பறக்கும் பிரச்சாரம் செய்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

தேர்தல் நேரத்தில் மட்டும் அனைத்து. ஓட்டு பொறுக்கி கட்சிகளுக்கும் அதன் முக்கிய தலைவர்களுக்கும் ஏறக்குறைய 200 வீடியோ படங்கள், பல ஆயிரம் பிரதிகளுடன் எடுக்கப்பட்டது. அச்சாக மசாலா சினிமா பாணியில் பின்னணி இசையோடு, கைதேர்ந்த வசனகர்த்தாக்களின் பின்னணி குரலோடு, விவசாயியாக, தொழிலாளியாக, வீரம் செறிந்தவர்களாக, தேச பக்தர்களாக, பழமையை உடைத்தெறியும் நவயுக சிற்பிகளாக, கருணை வள்ளலாக வீடியோவில் தோன்றினார்கள்.

கருணாநிதி அரசு செலவிலேயே இப்படிவேஷம்கட்டி, 'தமிழ்நாடு செய்தி பிரிவு' திரைப்படமாக வெளியில் விட்டதை தேர்தல் கமிஷன் கடைசி நேரத்தில் தடை செய்து முடக்கிவிட்டது. இவை இல்லாமல், வழக்கமான பிரச்சார விளம்பரமும் மடை திறந்த வெள்ளம் போல் பொங்கி வழிந்தது.

சினிமா பாடலாசிரியர்கள், பின்னணி பாடகர்கள், இசையமைப்பாளர்களை வைத்து பதிவு செய்யப்பட்ட பல பத்தாயிரக்கணக்கான ஒலிப்பதிவு நாடாக்கள்! தலைவர்களின் புகழ் பரப்ப தொழில் ரீதியான கலைக் குழுவினர்கள் அமர்த்தப்பட்டனர். தமிழ்நாடு காங்கிரசு கட்சி மட்டும் 20 கலைக் குழுவினர்களை வாடகைக்கு அமர்த்தியது.

தேர்தல் நேரத்தில் வாக்காளருக்கு கொடுக்கும் கையூட்டுகளில், என்.டி.ராமராவ் கட்சி பல நவீன உத்திகளை கையாண்டது. ஜாக்கெட் துணிகள், சட்டை துணிகள், வளையல்கள், முலாம் பூசப்பட்ட மூக்குத்தி, கம்மல்கள், மோதிரங்கள், சோற்று பொட்டலங்கள் என கீழ்த்தரமான முறையில் வாக்காளர்களை கையேந்த வைத்தது.

பம்பாய் சிவசேனா, இந்து மதவெறி அமைப்பு, உறுமும் புலியுடன் பால்தாக்கரே படம் போட்ட 'டி' சட்டைகளையும், வெயிலுக்கு அணியும் அட்டை தொப்பிகளையும் கொடுத்தது. தி.மு.க. எம்.பி; வை.கோபால்சாமியும் விடுதலை புலி பிரபாகரன் படம் போட்ட 'டி' சட்டைகளை கொடுத்து ஓட்டுப் பொறுக்கினார்.

தமிழகத்தைப் போல் அனைத்து மாநிலங்களிலும் வாக்காளர்களை ஆட்டோவில் அழைத்துச் செல்வதும் லஞ்சம் கொடுப்பதும் ஏராளமாக நடந்தது. இந்தியா முழுக்க பல இடங்களில், குறிப்பாக கிராமங்களில் கட்சிப் பிரச்சார வீடியோக்களுக்கு பதில் நேரடியாக மசாலா சினிமாக்களை போட்டு வாக்காளர்களை கவர்ந்திழுத்தனர்.

வேதாளம் முருங்கை மரத்தில் ஏறி கதை சொல்வது போல தலைவர்கள் அலங்கார ரதங்களில் வந்து வாக்காளர்களை கவர்ந்தார்கள்.

ஐந்து நட்சத்திர ஓட்டலின் அறை போன்று அனைத்து வசதிகளையும் அதில் அமைத்துக் கொண்டார்கள். குளுகுளு வசதி, தொலைத் தொடர்பு வசதி, ஒலி, ஒளி சாதனங்கள், நவீன பஞ்சு மெத்தை, திண்டுகள், கைதேர்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களைக் கொண்டு உள் அலங்காரம். மேற்கத்திய பாணியிலான கழிப்பிட வசதி, முகம் அலம்பும் தொட்டிகள், அலங்கார ஒப்பனை பொருட்கள் இவற்றோடு வந்து ஏழ்மையைப் பற்றி கண்ணீர் உருகினார்கள்.

கம்ப்யூட்டர் ராஜீவ் நேரடியாக விமானப் படிகளிலிருந்து மேடைப் படிகளுக்கு தாவி நாட்டு மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்தார்.

நாடு முழுவதும் தேர்தல் வேலைகளை ஒருங்கிணைக்க காங்கிரசுக் கட்சி டில்லியில் மிகப் பெரிய கம்ப்யூட்டர் அறையை உருவாக்கியது. 'கட்சியின் உள் அறை' என்று வர்ணிக்கப்பட்ட இது டெல்லி 24, அக்பர் ரோடில் உயர் பாதுகாப்போடு இயங்கியது.

நாட்டின் எந்த மூலைக்கும் நேரடியாக தொடர்பு கொள்ள 30-க்கும் மேற்பட்ட 'ஹாட் லைன்' தொலைத் தொடர்புகள் இங்கு புதிதாக இணைக்கப்பட்டது. அதன் ஒன்றின் ஒருநாள் வாடகை 4,500 ரூபாய். அதே நேரத்தில் நவீன உத்தியோடு பம்பாய் தொகுதி காங்கிரசு வேட்பாளர் 'ராக்' பாடகரை ஆடவிட்டு ஓட்டு வேட்டையாடினார்.

முதலாளித்துவ பத்திரிக்கைகளின் கணக்குப்படி இவற்றிற்கெல்லாம் ஆனசெலவு ரூபாய் 2,000 கோடி. 15 நிமிட வீடியோ படம் தயாரிப்பதற்கான செலவு ரூ.1.5 லட்சம். ஒரு வீடியோ ஊர்தியின் மாதவாடகை ரூ.1.28 லட்சம். 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற சங்கிலி தொடர் பத்திரிக்கைகளில் ஒரு நாள் ஒரு பக்க விளம்பரம் ரூபாய் 1,40,000. அதை வடிவமைக்க, தயாரிக்க 'ரீ டிபியூஷன்' 'லின்டா' 'ஆட்டா' போன்ற விளம்பர நிறுவனங்களுக்கு தனியாக கணிசமாக பெரும் தொகை தரப்பட்டது.

தேர்தல் கமிஷன் ஓட்டு சீட்டு அச்சடிப்பதற்கு பயன்படுத்தும் பேப்பர் எடை மட்டும் 1,990 டன். அதன் மதிப்பு சுமார் 30 கோடி ரூபாய். அச்சு செலவு தனி. ஓட்டு சீட்டு கட்சிகள் அச்சடித்த 'போஸ்டர்கள்', பிரசுரங்கள், 'பேட்ஜ்'கள் பேனர்கள் செலவை இதோடு ஒப்பிட்டுக் கொள்ளுங்கள். இவற்றுக்கான செலவு மட்டும் பலநூறு கோடி ரூபாய்களை தாண்டும்.

ஒரு நாடாளுமன்றத் தேர்தலுக்கு தேர்தல் கமிஷன் செய்யும் செலவு சுமாராக 200 கோடி. இதில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கான செலவு சேர்க்கப்படவில்லை. ஒருநாள் செலவே இப்படியென்றால், ஒரு மாதகாலம், பல பத்தாயிரம் தேர்தல் அலுவலகங்களை திறந்து வைத்துக் கொண்டு, பல ஆயிரம் வாகனங்களை வைத்து கொண்டு, கூத்தடிக்கும் ஓட்டுக் கட்சிகளின் செலவுகளை கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

இவையில்லாமல் சாராயம், குண்டர்களுக்கு ஆகும் செலவு, கூட்டங்களுக்கு ஆட்களை திரட்டி வர ஆகும் செலவு, வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுக்க ஆகும் செலவு, உண்மையில் இவையெல்லாம் அவர்கள் கூறுவது போல் 10,000 கோடி ரூபாய்க்குள் அடங்குமா என்பது சந்தேகமே!

இவ்வளவு பணத்தையும் அவர்கள் எங்கிருந்து பெறுகிறார்கள், மக்களிடம் உண்டியல் குலுக்கியா? தங்கள் வீடு, நிலங்களை விற்றா?

ராஜஸ்தான் குவாலியர் அரச பரம்பரையில் வந்தவரும் காங்கிரசு ரயில்வே மந்திரியுமான மாதவ்ராவ் சிந்தியா, குனா தொகுதியில் போட்டியிட்டார். ரெயில்வே பணிகளை கான்ட்ராக்ட் எடுக்கும் சிரிகங்கா நகர் அரசு கான்ட்ராக்ட்காரர் சிந்தியாவின் தேர்தல் பணிகளுக்கு 40 ஜீப்புகளை வழங்கினார். ராஜஸ்தான் மாநில பேருந்து உடமையாளர்கள் 100 கார்களை வழங்கினார்கள். சிந்தியா தொகுதிக்கு மட்டும் ஆன போஸ்டர் செலவு ரூ.25 லட்சம். இதை ஒருவர் ஏற்றுக் கொண்டார்.

தரகு முதலாளி அம்பாணி இந்த தேர்தலில் மட்டும் காங்கிரசுக் கட்சிக்கு 200 கோடி ரூபாய் கொடுத்தார் என்று காங்கிரசு எடுபிடி 'சண்டே' பத்திரிக்கை எழுதுகிறது. உண்மை எவ்வளவோ? அவர் எதிர்க்கட்சிக்கும் 10 கோடி ரூபாய் தந்தாராம்! பெங்களூர் சாராய அதிபர் விஜய் மல்லய்யா, காங்கிரசுக்கு 20 கோடி ரூபாயும், எதிர்கட்சிக்கு 2 கோடி ரூபாயும் கொடுத்தார். தமிழ்நாட்டு ஸ்பிக் உரக் கம்பெனி அதிபர் எம்.எம்.சிதம்பரம் 'கணிசமான' பணம் காங்கிரசுக்கு கொடுத்தாராம்.

டில்லியில் போட்டியிட்ட காங்கிரசு எம்.பி.க்களின் தேர்தல் செலவுகள் அனைத்தையும், டில்லியின் மிகப் பெரும் வர்த்தக நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டன. மெர்க்குரி கன்சல்டன்ஸ், 'ஈஸ்ட் இன்டியா இம்பெக்ஸ்' மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள், குடிநீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டன. போஸ்டர் செலவு, தினசரி விளம்பர செலவு என்று தனித்தனியாக பிரித்துக் கொண்டன.

ராஜீவின் வலது கரமான தரகு முதலாளி பிர்லா, 60 காங்கிரசு கட்சி எம்.பிக்களின் செலவுகளுக்கு பொறுப்பெடுத்துக் கொண்டார் என்று 'சண்டே அப்சர்வர்' எழுதுகிறது.

கூலிக்கு அமர்த்தப்பட்ட ஆட்கள் மூலம் தொழில் முறையில் தேர்தல் பிரச்சாரம் நடக்கிறது; டின்னில் வந்திறங்கிய பசை, மொத்தமாக வாங்கப்பட்ட மூங்கில் கழிகள், மேற்பார்வையிட ஆட்கள்!



படிப்பகம்

www.padippakam.com




காங்கிரசின் சங்கிலி தொடர் பத்திரிக்கை விளம்பரம். 40 கோடி ரூபாய் வாரியிறைக்கப் பட்டது.

கடந்த 2 மாத காலத்தில் 20,000 கோடி ரூபாய்க்கு தொழில் துவங்க தரகு முதலாளிகளுக்கு அனுமதி அளித்தார். 5 சதவிகித கமிஷன் என்று பார்த்தாலும், இதன் மூலம் சுலபமாக தேர்தல் நிதியை சேகரித்து விட்டார் ராஜீவ் காந்தி' என்று 'பிசினஸ் இன்டியா' எழுதுகிறது.

ஆர்.பி.கோயாங்கா உட்பட 20க்கும் மேற்பட்ட தரகு முதலாளித்துவ நிறுவனங்களிடமிருந்து இவ்வாறு தேர்தல் நிதி பெற்றது காங்கிரசுக் கட்சி.

''இந்தியாவில் இருக்கும் ஒவ்வொரு பெரும் தொழில் நிறுவனங்களும் கணிசமான எம்.பிக்களின் வெற்றிக்கு பொறுப்பெடுத்துக் கொள்வது வழக்கம் தான்'' என்கிறது வீக் பத்திரிக்கை.

மேலும் கடந்த 2 மாத காலத்தில் 4,000 கோடி ரூபாய்க்கு பல தரகு முதலாளித்துவ நிறுவனங்கள், பங்கு கடன் ஈட்டு பத்திரங்கள் வெளியிட அனுமதியளித்து அதன் மூலமே பல நூறு கோடி ரூபாய்களை தேர்தல் நிதியாக பெற்றது காங்கிரசு அரசு.

பெட்ரோலியம், இரும்பு, எஃகு, சிமெண்ட், அலுமினியம், என்று அரசு நடத்தும் பெரும் ஏகபோக தொழில்களில் ஆண்டுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் வேலைகளை அரசு கான்ட்ராக்ட் விடுகிறது. உதாரணத்திற்கு 'இந்திய ஆயில் கார்ப்பரேஷன்' ஆண்டுக்கு 25,000 கோடி ரூபாய்க்கு வரவு செலவு செய்கிறது. இந்நிறுவனங்கள் விடும் கான்ட்ராக்டுகளிலிருந்து பலநூறு கோடி ரூபாய் ஆளுங்கட்சிக்கு கமிஷனாக கிடைக்கிறது.

மேலும் இந்நிறுவனங்களில், முறைகேடான செலவினங்கள் எழுதி ஆளுங்கட்சி பெரும்பணம் சுருட்டுகிறது.

பாசிச ராஜீவ் கும்பலுக்கு நிகராக எதிர்க்கட்சிகளுக்கு, அதிகாரத்தை இழந்த கோயாங்கா, நுஸ்லிவாடியா தரகு முதலாளித்துவ கும்பல் உதவியது. தரகு முதலாளித்துவ கும்பலிடமிருந்து தேர்தல் நிதி பெறுவதை 1985-ல் சட்டப்பூர்வமாக்கி சாதனை படைத்தார், பாசிச ராஜீவ்.

அதன் பிறகு வந்த கர்நாடக ஹெக்டே, எம்.ஜி.ஆர். கருணாநிதியின் தேர்தல் நிதி சேகரிப்புகள் பெரும் பரபரப்சலில் முன்னேறியது. சாராய அதிபர்கள், பேருந்து முதலாளிகள் வரை பரந்து விரிந்தது. ஜெயலலிதா போன்ற 'புரட்சி' தலைவிகள், செலவு செய்தது போக தேர்தல் நிதியில் பெரும் பணத்தை சுருட்டிக் கொண்டதும் ஊரறிந்த ரகசியங்கள்!

இவையில்லாமல், ஏகாதிபத்திய நாடுகள், இந்திய தேர்தலில் நேரடியாக பணத்தை கொட்டுகின்றன. குத்தகைக்கு எடுத்தவர் நிலத்தை வேறொருவருக்கு மேல் குத்தகை விடுவது போல இது நடக்கிறது.

'77 தேர்தலில், 'ரஷியாவிடமிருந்தும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் எல்லாக் கட்சிகளும் தான் நிதி பெறுகின்றன' என்று அன்றைய நிதி அமைச்சர் ஒய்.பி.சவான் போட்டுடைத்தார்.

தேர்தல் காலங்களில், இந்நாடுகள் இந்திய நாட்டிலிருந்து ஏராளமான பொருட்களை வாங்கி அதற்கு பல மடங்கு அதிகம் விலை கொடுக்கிறது. பொருளின் உண்மையான விலைக்கு போக மீதி தொகையை அந்நாடுகள் சொல்லும் அரசியல் கட்சிகளுக்கு பொருள் ஏற்றுமதி செய்த நிறுவனங்கள் கொடுத்து விடுகின்றன. மேலும் அந்நாடுகளின் உதவியுடன் இந்தியாவில் இயங்கும் பல்வேறு மத நிறுவனங்களின் மூலம் அரசியல் கட்சிகளுக்கு பணம் கைமாறுகிறது.

வர்த்தக சூதாடிகளும், அரசு கான்ட்ராக்ட்காரர்களும், தரகு முதலாளிகளும், நிலப்பிரபுக்களும், ஏகாதிபத்தியங்களும், இந்தியத் தேர்தலில் 10,000 கோடி ரூபாயை வாரி இறைத்திருக்கிறார்கள். பத்தாயிரம் கோடி ரூபாயைக் கொடுத்துவிட்டு அவர்கள் வெறுமனே ஒதுங்கிக் கொள்வதற்கு பைத்தியக்காரர்கள் அல்ல. போட்ட பணத்தை பல பத்து மடங்கு வட்டியோடு அடுத்த ஐந்தாண்டுகளில் (!) மக்களின் ரத்தத்திலிருந்து உறிஞ்சி எடுத்துவிடுவார்கள். எனவே உழைக்கும் மக்கள் இதைப் புரிந்து கொண்டு தேர்தல் திருவிழா, வாண வேடிக்கைகளுக்கு எதிராகக் கொதித்தெழ வேண்டும். போலி ஜனநாயகத் தேர்தலுக்கு முடிவு கட்ட புரட்சிகர அமைப்புகளில், அணி திரள வேண்டும்.

■ பச்சையப்பன்

## திருச்சி நேருசிலை தகர்ப்பு:

திருவையாறு குடமுருட்டி மருதையாற்றுச் சம்பவம் போல மீண்டும் ஒரு சதி வழக்கை மக்கள் கலை இலக்கிய கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, பகத்சிங் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் மீது தொடுத்துள்ளது போலீசு - காங்கிரசு கும்பல்.

ஆடம்பரமான தேர்தல் பிரச்சாரத்தையெல்லாம் அமுக்கிவிட்டு நேரு சிலை உடைப்புப் பிரச்சாரம் திருச்சி நகரையே குலுக்கியது. புரட்சிகர அமைப்பைப் பற்றி எங்கும் பொய் பிரச்சாரம், அவதூறு, பழி சுமத்தல் - இவைகளை போலீசும் காங்கிரசு கும்பலும் திட்டமிட்டாற்போல ஒரே குரலில் உடனே ஒலித்தன.

தமிழக அளவில் வளர்ந்துவரும் புரட்சிகர அமைப்புகளின் செல்வாக்கை ஒடுக்க போலீசு இச்சதித் திட்டத்தை அரங்கேற்றக் காத்திருந்தது. வன்முறைக் கும்பல், தீவிரவாத சக்திகள், பயங்கரவாதிகள் என பழி சுமத்தி மக்களிடமிருந்து தனிமைப்படுத்த போலீசு கும்பல் காத்திருந்தது.

அதிலும் திருச்சி நகரில் தொடர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்ற வடிவங்களில் மக்கள் பிரச்சனைகளுக்காக போராடுவதால் அரசியல் கட்சிகளுக்கு மாற்று சக்தியாகிவிடுமோ என்ற அச்சம் போலீசு கும்பலை உசுப்பிவிட்டுள்ளது. சமீபத்தில் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தைக் கண்டஞ்சிய போலீசு இச்சமயத்தில் தனது சதித்திட்டத்தை நிறைவேற்றத் துணிந்துவிட்டது.

போபார்ஸ் பீரங்கி பேர ஊழலில் நாறிப்போன ராஜீவ் கும்பல் மக்களின் ஆதரவு இல்லாமல் போனது ஒருபக்கம் இருந்தாலும், தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தால் மேலும் ஒருபடி அம்பலமானது. திருச்சி நகரின் வேட்பாளர் எல். அடைக்கலராஜ் திருச்சி நகரையே விலைபேசும் அளவுக்கு பண முதலையாவார். இவர் சொத்துக்கள் எவ்வளவு என்பதையும், மேலும் சொத்துக்களை விரிவாக்கிக் கொள்ள ஓட்டுப்போட நாம் உதவுவதா என்பதை மக்கள் முன் விவரமாக எடுத்து வைக்கப்பட்டது.

பல வடிவங்களிலும் இப்பிரச்சாரம் சென்றதனால் காங்கிரசு கும்பல் தோல்வியின் அறிகுறியை கண்டு குறுக்குவழியில் தனது பிரச்சாரத்தை எடுத்துச்செல்ல எத்தணித்தது.

ம.க.இ.க. பிரச்சாரத்தை முடக்குவதும் அதன் யுக்தியில் ஒரு அங்கமாக அமைந்தது.

இப்பொழுது புரட்சிகர அமைப்புகளை ஒடுக்க காத்திருந்த போலீசு கும்பலும் இவர்களுடன் கூட்டுச் சேர்ந்தது. அதன்படி நேரு சிலையை குண்டுவைத்து தகர்க்கும் சதித்திட்டத்தை தீட்டினர். 21ஆம் தேதி அதிகாலை 3.30 மணிக்கு இத்திட்டத்தை நிறைவேற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# புரட்சிகர அமைப்புகளை ஒடுக்க போலீசு - காங்கிரசு கும்பலின் கூட்டுச்சதி நடவடிக்கை!

**'நாய்' நாடகம்**

சிலை தகர்ப்பை முடித்துக் கொண்டு நேரடியாக அதிகாலையில் ஒரு வேனில் மோப்ப நாயுடன் வாலில்லா போலீஸ் நாய்கள் பட்டாளம் தோழர் கபிலன் கடைக்கு (காந்திபுரம்) 100 அடி தள்ளி வந்து இறங்கியது. மோப்ப நாய்க்கு பிஸ்கெட் போட்டுக் கொண்டு கபிலன் கடை நோக்கி சங்கேத மொழியில் மோப்ப நாயை தள்ளிக் கொண்டு சென்றனர். டீக்கடைக்கு எதிரில் நமது வண்டிப் பிரச்சார ஊர்தியை (இதில் இருபக்கமும் முழக்கங்கள் எழுதப்பட்டிருந்தது) சுற்ற வைத்தனர். பின் ஓடப் பார்த்த நாயை முகத்தருகில் பிஸ்கட்டை காண்பித்த வாறே சென்று கடைக்குள் பிஸ்கட்டை எறிந்தனர். கடைக்குள் ஓடி பிஸ்கட்டை கவ்விக் கொண்டு நாய் ஓடப் பார்த்தது. வலுக்கட்டாயமாக மோப்ப நாயை கடைக்குள் உட்கார வைத்தனர். பின் அங்கிருந்து தோழரின் வீட்டிற்கு விரட்டிச் சென்றனர். அது தோழரின் வீட்டிற்கு அல்லாமல் மலங்கழிக்கும் காட்டுப் பக்கம் ஓடியது. போலீசு கும்பல் அதை கழுத்தை பிடித்து இழுத்து கடைக்கு நடத்திய நாடகம் போலவே வீட்டிலும் நடத்தினர்.

உடனே பேப்பரில் ''நாய் கண்டுபிடித்து விட்டது. துப்பு துலங்கியது'' என்ற பொய் செய்தியும் ம.க.இ.க. அலுவலகம் என கண்டுபிடித்து விட்டதாக பொய் பிரச்சாரம் தொடங்கியது. ம.க.இ.க. அலுவலகம் காந்திபுரத்தில் அல்ல; சங்கிலியாண்டபுரத்தில் தான் உள்ளது என்ற விபரமும், காந்திபுரம் டீ கடை கபிலனுக்குச் சொந்தமானது என்பதும் போலீசுக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் புதியதாக ஏதோ கண்டுபிடித்ததாக ஒரு நாடகம் ஆடினர்.

**போலீசின் வெறியாட்டம்**

திட்டமிட்டாற் போல காந்திபுரம், சங்கிலியாண்டபுரம், செந்தண்ணீர்புரம், தாரநல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தோழர்களின் கைதுப் படலத்தை உடனடியாகத் தொடங்கினர்; டீ கடைக்கு வந்த பகத்சிங் இளைஞர் முன்னணி தோழர் ஆசாத்தை நிற்க வைத்து அடித்து இழுத்துச் சென்றனர். 17 பேரை கைது செய்தனர். பலமுறை வீடுகளில் புகுந்து பொருட்களை சேதப்படுத்தினர். பெண்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதுமில்லாமல் சுதந்திரா என்ற நமது பெண் தோழரையும் தோழர் கபிலனின் அம்மா, மனைவி ஆகிய இருவரையும் கைது செய்தனர். தோழர்களை அடையாளங்காட்ட உள்ளூர் கருங்காலிகளை போலீசு பயன்படுத்திக் கொண்டது. பொது மக்களிடையே இப்பகுதிகளில் பீதியூட்டினர்.

இப்படி போலீசு புரட்சிகர அமைப்பை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த நேரு சிலை குண்டு வைத்து தகர்த்த நிகழ்ச்சியை இவ்வாறு ஒருபக்கம் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. மறுபுறம் இதே சம்பவத்தை காங்கிரசு கும்பல் அனுதாப ஓட்டுக்களைச் சேகரிக்க இச்சம்பவத்தை பயன்படுத்த ஆரம்பித்துவிட்டது.

குண்டு வெடிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம், ஊர்வலம் எனத் தொடங்கி காங்கிரசு கட்சியினர் தேர்தல் பிரச்சாரம் செய்தனர்.

உயிருடன் உள்ள நேருவே வெடிகுண்டால் கொல்லப்பட்டது போல் படங்களும், கண்டன அறிக்கைகளும் பத்திரிக்கைகளில் அவர்கள் பாணியில் சித்தரித்தனர்.

ஆனால் எதிர்கட்சிகளான போலி கம்யூனிஸ்டுகளும், தி.மு.க.வும் அடைக்கலராஜ் அனுதாப அலைக்காக வெடிகுண்டை வைத்துவிட்டு யார்மீதோ பழி சுமத்துகிறார் என்றும், '84 தேர்தலில் இந்திரா இறப்பைக் காட்டி ஓட்டுக் கேட்டது



போல இப்போது நேரு சிலை தகர்ப்பு வேலையைச் செய்கின்றனர் என்றும் பிரச்சாரத்தை வேகமாக செய்து காங்கிரசு கும்பலின் திட்டத்தை அம்பலமாக்கினர். மக்களின் பெரும்பான்மை கருத்துக்கூட இப்படித்தான் இருநதது.

போலீசின் வெறியாட்டமும் பொய் செய்திகளும் மக்களிடம் எதிர் விளைவையே ஏற்படுத்தியது. திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காந்திபுரம் மக்களிடம் கேட்டாலும் பிறபகுதி மக்களை கேட்டாலும் போலீசின் தில்லுமுல்லுகள் தெரியவரும்.

**பத்திரிக்கைகளின் அண்டப்புளுகு**

தீவிர கம்யூனிஸ்டுகளின் நாசவேலை, பயங்கரவாத சக்திகளின் கைவரிசை, தீவிர கம்யூனிஸ்டுகள் தலைமறைவு, வல்லம் முந்திரிக் காட்டிலும், தஞ்சையிலும் முன்னணியினர் தலைமறைவு, வல்லம் முந்திரிக் காட்டில் முக்கிய புள்ளி கைது, முக்கிய ஆதாரங்கள் பிடிபட்டன — போன்ற போலீசின் பொய் செய்திகளை 'திடுக்கிடும்' செய்திகளாக பத்திரிக்கைகள் பரப்பின.

இப்படியெல்லாம் செய்தாலும் மக்களிடம் எடுபடவில்லை. மக்கள் ம.க.இ.க.வையும், உண்மைகளையும் நன்றாகவே புரிந்து வைத்துள்ளனர். பாலங்களுக்கு குண்டு வைப்பது, சிலைகளைத் தகர்ப்பது, ரயில்களை கவிழ்ப்பது போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் புரட்சிகர அமைப்புகளுக்கும் சம்பந்தமே இல்லை என்பதை மக்கள் புரிந்துள்ளனர். திருவையாறு குடமுருட்டி பொய் வழக்கில் நமது தோழர்கள் நீதிமன்றத்திலேயே நிரபராதிகள் எனத் தீர்ப்பான பின்னும், மருதையாற்று குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வி.வி.மு.வை சம்பந்தப்படுத்தி விடுவித்த பின்னும் இப்படியொரு புதுத்திட்டத்தை போலீசு திட்டமிட்டுள்ளதின் நோக்கம் என்னவெனில், வழக்கு எப்படியானாலும் பரவாயில்லை; மக்களிடமிருந்து புரட்சிகர அமைப்பை தனிமைப்படுத்த இன்னொரு முயற்சியை செய்து பார்க்கலாம் என ''கியூ'' பிரிவு உளவுத்துறை போலீசு முயற்சித்துள்ளது.

பின்னர் தஞ்சையில் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகள் நினைவுச் சின்னத்தின் மீது டயர்களைப் போட்டுக் கொளுத்தி விட்டு, ''நினைவுச்சின்னத்தை தகர்க்க தீவிர கம்யூனிஸ்டுகளின் சதி!'' என்றொரு நாடகத்தை போலீசு — காங்கிரசு — பத்திரிக்கை கும்பல் அரங்கேற்றியது. அதைத் தொடர்ந்து தஞ்சையிலிருந்த ம.க.இ.க. பொதுச்செயலாளர் தோழர் மருதையன் மற்றும் 3 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இரு நாட்கள் விசாரணைக்குப் பின் இத்தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அதன் பிறகு திருச்சியில் கைதான தோழர்கள் விடுவிக்கப்பட்டாலும், மூன்று தோழர்கள் மீது பொய் வழக்கு சோடிக்கப்பட்டுள்ளது. தோழர்களைக் கைது செய்து வீடு புகுந்து சூறையாடி போலீசார் பய பீதியூட்டிய போதிலும், காங்கிரசும் பத்திரிக்கைகளும் அவதூறு பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்ட போதிலும், திருச்சி ம.க.இ.க. தோழர்கள் சிறிதும் அஞ்சாமல், தோழர்களை விடுதலை செய்யக் கோரி சுவரொட்டிகளை பேருந்துகளில் ஒட்டினர். ஆயிரக்கணக்கான பிரசுரங்களை மக்களிடம் விநியோகித்து தமது செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டனர். போலீசு — காங்கிரசு கும்பலின் கூட்டுச்சதியை அம்பலப்படுத்தியும், தோழர்களை விடுதலை செய்யக் கோரியும் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போலீசு — காங்கிரசு கும்பலின் இச்சதி நடவடிக்கை, நமது அமைப்பின் பெயரும், முழக்கங்களும் மக்களிடையே ஆழப் பதிவதற்கு ஒருவகையில் உதவியுள்ளது. மக்களிடமிருந்து புரட்சிகர அமைப்புகளைத் தனிமைப்படுத்த போட்ட சதித்திட்டம் அவர்களுக்கே எதிராகப் போய் முடிந்துள்ளது.

★ போலீஸ் — காங்கிரசு கும்பலின் கூட்டுச் சதியை அம்பலப்படுத்துவோம்!

★ போலீஸ் — காங்கிரசு கும்பலின் அவதூறுகள் — பொய் வழக்குகளை முறியடிப்போம்!

**மக்கள் கலை இலக்கியக்கழகம்,**
**விவசாயிகள் விடுதலை முன்னணி,**
**தமிழ்நாடு.**



படிப்பகம்

www.padippakam.com

## 1984 தேர்தல்:
# சீக்கியர்கள் படுகொலை!
## 1989 தேர்தல்:
# முஸ்லீம்கள் படுகொலை!



பகல்பூரை ஒட்டி 6 கிலோமீட்டர் தூரத்தில் சந்தேரி அல்லி குளத்தில் 70க்கும் மேற்பட்ட முஸ்லீம் பிணங்கள். இந்துமதவெறியர்களால் குரூரமான முறையில் வெட்டி வீசப்பட்ட அப்பாவி முஸ்லீம்கள்.

'பாபரின் பரம்பரையே பாகிஸ்தானுக்கு ஓடுகிறாயா? சவக்குழிக்கு செல்கிறாயா?' 'இந்துஸ்தான் இந்துக்களுக்கே' 'உயிர் மேல் ஆசையிருந்தால் வந்தே மாதரம் ஓது! ராம பக்தனாக மாறு!'

— காதைக் கிழிக்கும் தேர்தல் கூச்சல்களுக்கிடையிலும் இந்த கொலைவெறி கோஷம்தான் வடமாநிலங்கள் முழுக்க எதிரொலித்தது. 'பாபுஜி அம்மே பச்சாயி?' 'பாபுஜி என்னை காப்பாற்று' முஸ்லீம் சகோதரிகளின் இந்த அவலக்குரல் அந்த கொலை வெறிகளைத் தாண்டி எங்குமே கேட்கவேயில்லை!

தனது அரசியல் — பொருளாதார - கிரிமினல் குற்றங்களால் மக்களிடமிருந்து முற்றாக தனிமைப்பட்ட பாசிச ராஜீவ் கும்பல் தனது கடைசி ஆயுதமான மதவெறியை மக்கள் மீது ஏவியது. ஏற்கனவே அதற்காக தயாராக வைத்திருந்த ராமஜென்ம பூமி / பாபர் மசூதி விவகாரத்தை அவிழ்த்துவிட்டது. சர்ச்சைக்குள்ளான ராமஜென்ம பூமி / பாபர் மசூதி சுற்றுச்சுவரை ஒட்டி பெரும் பொருட்செலவில் புது ராமர் கோயிலை எழுப்ப இந்துமத வெறியர்களுக்கு அனுமதி அளித்தது.

'அனுமன் சேனை' என்ற பெயரில் இந்து மத வெறியர்கள் களத்தில் இறங்கினர். 2000 பேருக்கு மேல் வசிக்கும் கிராமம்தோறும் ராமர் கோயிலைக் கட்டுவதற்கான செங்கல்லை பூசை செய்யும் 'சிலா பூஜன்' அரங்கேற்றப்பட்டது. முஸ்லீம் சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் பகுதிகள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ராமஜென்ம பூமியை நோக்கி நாடு முழுவதும் சிலா பூஜனுக்கு பாதை அமைக்கப்பட்டது.

கோட்டா, பதுவான், ரட்லம், மாஷு, கார்கோன், கம்பட், பலன்பூர், ஹான்சோட், ஜெய்ப்பூர், வாட்லி, நக்டர், இந்தூர் என்று நீண்டுகொண்டே சென்ற ரத்தச் சுவடுகள், பீகார் - பகல்பூரில் ரத்தமும் சதையும் சாம்பலும் கலந்து சகதியானது.

உயிருடன் வெட்டி வீசப்பட்ட முஸ்லீம் சகோதரர்களும், கற்பழிக்கப்பட்ட முஸ்லீம் சகோதரிகளும் கங்கை நதியில் மிதந்தனர். பகல்பூரை சுற்றி பல மைல் தூரங்களில் எங்கும் மனித உடல்கள். குளம், குட்டை, கிணறுகளில் எங்கு நோக்கினும் கொத்துக் கொத்தாக அழுகிய பிணங்கள்! மார்பகங்கள் அறுக்கப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு.... நெஞ்சே வெடித்துவிடும் கோரங்கள்!

அக்டோபர் 24ந் தேதி 'சிலாபூஜன்' பகல்பூர் நகரத்தில் நுழைந்த உடனே ஊர்வலத்தில் முஸ்லீம்கள் வெடிகுண்டு எறிந்ததாக, ஊர்வலத்திற்கு பாதுகாப்பாக வந்து கொண்டிருந்த இந்திய ராணுவ வீரர்களை முஸ்லீம்கள் தாக்குவதாக, பாகிஸ்தானில் தயாரான, வெடிகுண்டுகளையும், துப்பாக்கிகளையும், தாக்குதலில் ஈடுபட்ட முஸ்லீம்களிடமிருந்து பறித்திருப்பதாக, புரளி கிளப்பி விட்டு முஸ்லீம்களை வேட்டையாடினார்கள்.

பாதுகாப்புக்கென்று வந்திருந்த எல்லைப் பாதுகாப்பு படை, பீகார் மிலிட்டிரி போலீசு, பீகார் போலீசு மற்றும் அண்டை மாநிலத்திலிருந்து வந்திருந்த உ.பி.போலீசும் உள்ளூர் கிரிமினல்களை அமர்த்திக் கொண்டு முஸ்லீம்களை நர வேட்டையாடியது.

மறுபுறம் ஊர்வலத்தில் வந்த இந்து மத வெறியர்கள், ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், உள்ளூர் உயர்சாதி இந்துக்களான யாதவ், மண்டல் போன்ற சாதிய வெறியர்களையும் உடன் அழைத்துக் கொண்டு முஸ்லீம்களை குரூரமாக வெட்டி சாய்த்தனர். ஊர்வலத்தில் உடன்வந்த ராணுவம் போலீசில் பெரும்பாலோர், இந்து மரபுப்படி நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு முஸ்லீம்களுக்கு எதிரான கோஷங்களை வெறியுடன் கத்திக் கொண்டு வந்ததை மாவட்ட மாஜிஸ்ட்ரேட் பக்கத்திலிருந்தும் தடுக்கவில்லை. முஸ்லீம்களை சுற்றி வளைத்து தாக்க, 'சிலாபூஜன்' ஊர்வலத்திற்கு சட்டபூர்வ அனுமதி அளித்த பீகார் காங்கிரசு அரசு, பகல்பூரில் 'சிலாபூஜன்' நுழைந்தவுடன் தெருவில் கூடுவது சட்டவிரோதம் என்று அறிவித்து கண்டவுடன் சுடும் ஊரடங்கு உத்திரவு பிறப்பித்தது. இதற்கு வசதியாக அரசு ஆதரவு ஏடான 'இந்துஸ்தான் டைம்ஸ்' (ராஜீவின் வலதுகரம் தரகு முதலாளி பிர்லாவுக்குச் சொந்தமானது) குரூப்பின் 'இந்துஸ்தான்' என்ற உள்ளூர் இந்தி தினசரியில் கலவரத்தைப் பற்றி வதந்தி பரப்பியது, பீகார் அரசு.

4 நாள் ஊரடங்கு நேரத்தின் போது இந்து கடைகள் உட்பட அனைத்து கடைகளையும் உடைத்து சுமார் 15 கோடி ரூபாய் பொருட்களைச் சூறையாடியது ராணுவமும், போலீசும், கிரிமினல் கும்பலும். சுஜாகன்ஜ் பசாரில் இருந்த நேஷனல் ஷு கம்பெனி, நேஷனல் வாட்ச் கம்பெனி இரண்டையும் உடைத்து சூறையாடிய பொருட்களின் மதிப்பு மட்டும் 18 லட்சம் ரூபாய்! ராணுவ கும்பல் பல கடைகளை உடைத்து பட்டுத் துணிகளை பண்டல் பண்டலாக வாரிச் சென்றது.

★ அக்டோபர் 24 இரவு பகல்பூர் நகரமே பிணவாடையில் மூழ்கியது. இந்து மதவெறியர்கள் வெடிகுண்டுகளை வீசி பல முஸ்லீம் காலனிகளை மொத்தமாக நாசமாக்கினார்கள். துப்பாக்கி, கத்தி, வாட்களுடன் ஜீப்புகளில் அலைந்து திரிந்து தப்பித்தோடிய முஸ்லீம்களை சரமாரியாக வெட்டிக் கொன்றனர். போலீசும் ராணுவமும் கொலைகளை மறைக்க, அரசு வாகனங்களில் நூற்றுக்கணக்கில் முஸ்லீம் பிணங்களை ஏற்றி கங்கையில் வீசியெறிந்தது. குற்றுயிராய் இருந்த முஸ்லீம்களுக்கு வைத்தியம் பார்த்த மருத்துவர்கள், அடைக்கலம் கொடுத்த இந்துக்களை



படிப்பகம்

www.padippakam.com

யும் விடாமல் வெட்டிக் கொன்றனர்,

★ நயாபசார், சஹிசன் கேட் பகுதியிலிருந்து தப்பித்து வந்த 52 பேர் அடங்கிய 4 ஏழை முஸ்லீம் குடும்பங்களுக்கு அடைக்கலம் கொடுத்தார், முன்னா என்ற உள்ளூர் 'கம்யூனிஸ்ட்' கட்சித் தலைவர். 19 குழந்தைகளும், 18 முஸ்லீம் பெண்களும் வெளியில் தலைகாட்டாமல் இரண்டு நாள் பட்டினியால் வாடினர். 26ந் தேதி 11 மணிக்கு பட்ட பகலில் 70 பேர் அடங்கிய கொலைவெறியர்கள் அவர் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். குழந்தைகள் என்றும் பாராமல் தஞ்சம் புகுந்திருந்த அபலைகளை கோரமாக கொன்று குவித்தனர். குழந்தைகளை தரையில் அடித்துக் கொன்றது கொலை வெறி கும்பல். புன்னி பேகம் என்ற முஸ்லீம் சகோதரியின் மார்பகத்தை வெட்டி எறிந்தனர். 44 முஸ்லீம்கள் 10 நிமிடத்தில் பிணங்களானார்கள். அரை கிலோமீட்டர் தூரத்தில் போலீசு நிலையத்திலிருந்து போலீசு குண்டர்கள் இவ்வளவையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

★ பகல்பூரை ஒட்டிய சாந்திரி கிராமம். 27ந் தேதி வெள்ளிகிழமை 125க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் உள்ளூர் மசூதியில் நமாஸ் செய்து கொண்டிருந்தனர். கொலைவெறியர்கள் அக்கிராமத்தை தாக்க, 125 முஸ்லீம்களும், அருகில் இருந்த இரண்டு மாடி கட்டிடத்தில் தஞ்சம் புகுந்தனர். இரவு 7 மணி வரையில் அவர்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு மறைந்திருந்தனர். அப்போது அப்பகுதியில் சென்ற ராணுவத்தினரை அழைத்து தங்களுக்கு பாதுகாப்பு கோரினார்கள்.

அப்போது பீகார் உள்ளூர் போலீசும் அங்கு வந்தது. விடியற்காலை, அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு தான் கொண்டு செல்வதாக ராணுவத்திடம் கூறியது போலீசு. ராணுவம் சென்ற சிறிது நேரத்தில், போலீசு, மதவெறியர்களுக்கு முஸ்லீம்களை காட்டிக் கொடுத்தது. நூற்றுக்கும் மேற்பட்டோர் அங்கேயே வெட்டிக் கொல்லப்பட்டனர். தப்பியோடியவர்களை பிடித்து வரிசையாக நிற்க வைத்து, அருகிலுள்ள அல்லி குளத்திற்கு அழைத்துச் சென்றது மதவெறி கும்பல். அங்கு அனைவரையும் கண்டதுண்டமாக வெட்டி அல்லி குளத்தில் தூக்கிப் போட்டது.

மறுநாள் காலை அங்கு வந்த இராணுவ மேஜர் வீர் அதிர்ச்சியடைந்தாராம்! அல்லிக் குளத்தில் பிணங்களுக்கு மத்தியில் ஒரு இளம்பெண் கதற, அவளை வெளியில் இழுத்த போது குற்றுயிராய் இருந்த அந்த முஸ்லீம் சகோதரியின் கால்கள் வெட்டப்பட்டு இருந்தது. அவருடன் சேர்த்து 70க்கும் மேற்பட்ட பிணங்களை அங்கிருந்து எடுத்தனர். இப்படி முடிவற்ற குரூரங்கள் பகல்பூர் முழுக்க பல நாட்கள் நடந்தது. பகல்பூரில் மட்டும் 1000க்கும் மேற்பட்ட முஸ்லீம்களை படுகொலை செய்தனர்.

★ பகல்பூர் முழுக்க இருந்த நீர்நிலைகள், அழுகிய பிணங்களால் நஞ்சாகிப் போனது. குடிநீரை குடிக்கவே, போலீசும் ராணுவமும் அஞ்சியது. பகல்பூர் பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த கிணற்றிலிருந்து கொத்துக் கொத்தாக மனித உடல்கள் எடுக்கப்பட்டது.



பகல்பூர் மதக்கலவரத்திற்கு பலியானவர்களான குழந்தைகளும் விதவைகளும் - அகதிகள்' முகாமில்

நகர் முழுக்க பல இடங்களில் முஸ்லீம் உடல்கள் அழுகிக் கிடந்தது. பகல்பூர் ரயில்வே நிலையத்திற்கு அருகில், கர்ப்பிணி முஸ்லீம் சகோதரியை படுக்க வைத்து அவள் வயிற்றில் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டு நசுக்கிக் கொன்றது இந்து மதவெறி கும்பல். பட்டப்பகலில் பலபேர் பார்வையின் மத்தியில் இது நடந்தது.

★ பல ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள், பலநாட்கள் விசாரணை இன்றி போலீசு கொட்டடிகளில் அடைக்கப்பட்டனர். கொடுரமாக சித்திரவதை செய்யப்பட்டனர். நாத்நகர் உள்ளூர் போலீசு நிலையத்தில், இரண்டு சிறு அறைகளில் 60க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் மூச்சுத்திணற அடைக்கப்பட்டிருந்தனர். போலீசு நிலையமே திறந்தவெளி கழிப்பிடம் போல நரகல் நிரம்பி கிடந்தது என்கிறார் அங்கு சென்ற பார்த்த 'இந்து' பத்திரிக்கையாளர். முதல் குற்றப் பத்திரிக்கையில்,

[redacted]

பகல்பூர் மருத்துவமனையில் கொலைவெறித் தாக்குதலால் படுகாயமுற்றுக் கிடப்பவர்கள்



அவர்களைக் கைது செய்ததற்கான காரணமோ, கைது செய்துள்ளவர்களைப் பற்றிய விபரமோ எதுவும் இல்லை. போலீசார் இவ்வாறு பல அப்பாவிகளை பிடித்து தங்களது சாராய செலவுக்கு ரூபாய் ஆயிரம், இரண்டாயிரம் என்று பணம் வசூலித்தனர்.

★ பகல்பூர் படுகொலைகளை முன்னிருந்து நடத்திய அம்மாவட்ட எஸ்.பி.திவேதியை, மாநில அரசு கண் துடைப்புக்காக இடமாற்றம் செய்தது. அதையே சகித்துக் கொள்ள முடியாத இந்து மதவெறியர்கள், ராஜீவ் கலவரத்தை பார்வையிடச் சென்ற போது அவரை சூழ்ந்து 'கேரோ' செய்து அந்த இடத்திலேயே திவேதியின் இடமாற்றத்தை வாபஸ் பெற வைத்தனர். இந்து மதவெறியர்களின் கை அந்த அளவுக்கு மேலோங்கியிருந்தது.

1984ல் தேர்தலின் போது நிராயுதபாணியான 5000க்கும் மேற்பட்ட சீக்கியர்களை படுகொலை செய்து இந்து வெறியை தூண்டி ஆட்சியை பிடித்தது பாசிச ராஜீவ் கும்பல். 1989ல் அதே யுத்தியைக் கையாண்டு, வடமாநிலங்களில் நிராயுதபாணியான முஸ்லீம்களின் மீது இந்து வெறியர்களை தூண்டிவிட்டு தேர்தலைச் சந்தித்தது ராஜீவ் கும்பல்.

அறுவடையை ராஜீவ் அல்ல; இந்து மதவெறியர்களே தக்க வைத்துக் கொண்டார்கள். வெள்ளை ஏகாதிபத்தியம் இந்து - முஸ்லீம் கலவரத்திற்கு விதை போட்டு விட்டு, அதிகாரத்தை கைமாற்றி கொடுத்த அதே யுத்தியை பாசிச ராஜீவ் கும்பல் கையாண்டிருக்கிறது.

நாடு முழுக்க இவ்வாறு, 600 இந்துக் கோயில்கள், மொகலாய மன்னர்களால் மசூதிகளாக மாற்றப்பட்டு விட்டன; அவை அனைத்தையும் விரைவில் மீட்போம் என கொக்கரிக்கிறார்கள், இந்து மதவெறியர்கள். வரலாறு காணாத மதவெறி அபாயம் நாட்டை வேகமாக சூழ்ந்து வருகிறது. பாசிச ராஜீவ் கும்பலின் துணையுடன் ஒட்டுப்பெட்டியினுள்ளே, பொறுக்கிகள், கிரிமினல்கள் மட்டுமல்ல, திரிசூலம் ஏந்திய காட்டுமிராண்டிகளும் குடியேறிவிட்டார்கள்.!

— குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுச் சீட்டு ஜனநாயகத்தின் யோக்கியதை!

உலகிலேயே மிகப்பெரிய நாடாளுமன்ற ஜனநாயக நாடு இந்தியா தான் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுப் பொறுக்கிகளும் பத்திரிகைகளும் நம்மை நம்பச் சொல்கின்றன. ஆனால் நடந்து முடிந்த தேர்தல் அவர்கள் ஏற்றிப் போற்றும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கிவிட்டது. இதற்கு முன் தேர்தல் நேரத்தில் எங்காவது நடக்கும் தில்லுமுல்லு, மோசடி, வன்முறை பற்றி பத்திரிக்கைகள் அதிசய செய்தியாக வெளியிடுவது போய், இம்முறை அமைதியாக வாக்களிப்பு நடந்த இடங்கள் பற்றி அதிசயமாக வெளியிடுமளவுக்கு வரலாறு காணாத வன்முறை தேர்தலே இம்முறை நடந்தது.

சாதி ஆதிக்கம், பண பலம், படை பலம் முதலானவற்றை கொண்ட முன்னாள் அரசர்கள், மிட்டா மிராசுகளை நிறுத்தி பண்ணை அடிமைகளின் 'பரம்பரை விசுவாசத்'தைக் கொண்டு வெற்றி பெறுவது, பழம்பெருச்சாளிகளின் வாரிசுகளையே புது முகங்களாக நிறுத்தி பரம்பரை கொள்ளையை தொடருவது, சினிமா நடிகர் - நடிகைகளின் கவர்ச்சியைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவது என்ற வழக்கமான உத்திகளோடு, இம்முறை பிரதானமாக மாஃபியா குண்டர்கள், கிரிமினல்களையே வேட்பாளர்களாக நிறுத்துமளவுக்கு ஓட்டுக் கட்சிகள் முன்னேறின.

நேருவின் பேரன் ராஜீவும், காந்தியின் பேரன் ராஜ்மோகனும் மட்டுமல்ல; இன்னும் ஏராளமான அரசியல் வாரிசுகள் இத்தேர்தலில் குதித்தனர். மார்க்கெட் இழந்து ஒதுங்கி நிற்கும் நடிகர் - நடிகைகள் தமது வாரிசுகளை - உறவினர்களையே நடிகர்களாக அறிமுகப்படுத்துவது போல, விதிவிலக்கின்றி எல்லா பிரபல ஓட்டுப் பொறுக்கிகளும் அரசியலில் கொட்டைபோட்ட பழம் பெருச்சாளிகளும் முன்னாள் அரச குடும்பத்தினரும் தமது வாரிசுகளையே வேட்பாளர்களாக முன்னிறுத்தினர்.

ராஜீவைத் தவிர நேரு குடும்பத்தைச் சேர்ந்த அருண்நேரு, மேனகாகாந்தி ஆகியோர் எதிர்கட்சி தரப்பிலும், ஷீலா கவுல் காங்கிரசு தரப்பிலும் போட்டியிட்டனர். முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மகன்களான ஹரிகிருஷ்ண சாஸ்திரியும், சுனில் சாஸ்திரியும் காங்கிரசு வேட்பாளர்களாக நின்றனர். மற்றொரு மகனான அனில் சாஸ்திரி ஜனதாதள வேட்பாளராகப் போட்டியிட்டார்.

சிந்தியா அரச குடும்பத்தின் வாரிசான முன்னாள் ரயில்வே மந்திரி மாதவராவ் சிந்தியா காங்கிரசு வேட்பாளராகவும், அவரது தாயும் முன்னாள் மகாராணியுமான விஜயராஜி சிந்தியா, அவரது மகள் வசுந்தரா ஆகியோர் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர்களாகவும் போட்டியிட்டனர். பீகார் காங்கிரசு முதல்வர் எஸ்.என்.சின்காவின் மனைவி, மருமகள், மருமகளின் தாய் என்று அவரது குடும்பமே தேர்தலில் நின்றது. இதுதவிர முன்னாள் மந்திரிகளின் மனைவிகளும் மகன்களும் கூட புதுமுகங்களாக தேர்தல் களத்தில் நின்றனர். 'பாபு' ஜெகஜீவன் ராமின் மகன் மீராகுமார், முன்னாள் ஆந்திரா முதல்வர் அஞ்சையாவின் மனைவி மணியம்மா, ராஜஸ்தான் முன்னாள் முதல்வர் சுகாதியாவின் மனைவி இந்துபாலா, மோகன் குமாரமங்கலத்தின் மகன் ரங்கராஜன், காங்கிரசின் கிழட்டுத் தலைவர் கமலபதி திரிபாதியின் மகன், பேரன்; உமா சங்கர் தீட்சித்தின் மருமகள் ஷீலா தீட்சித், முன்னாள் மந்திரியும் ரஷிய அடிவருடியான பகுகுணாவின் மனைவி கமலா, முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் மகனும் ஜனதாதள தலைவருமான அஜித்சிங், அவரது மருமகனான அஜாய்சிங்; அரிப் முகம்மதுகானின் மனைவி ரேஷ்மா; மத்திய மந்திரிகளாக இருந்த பி.வி.நரசிம்மராவ், சிவசங்கர், வெங்கல்ராவ் ஆகியோரின் மகன்கள்; முன்னாள் கேரள முதல்வர் கருணாகரனின் மகன் முரளிதரன்; முன்னாள் மராட்டிய முதல்வர் வசந்த்தாதா பட்டீலின் மகன் பிரகாஷ் பட்டீல்; எஸ்.பி.சவானின் மகன் அசோக்; ஒரிசா முதல்வர் பட்நாயக்கின் மனைவி ஜெயந்தி பட்நாயக்; முதலான வாரிசுகளும் உறவினர்களும் பரம்பரையாக கொள்ளையடிக்க போட்டியிட்டனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜனதாதள தலைவரும் இன்றைய உதவி பிரதமருமான தேவிலால் மூன்று தொகுதிகளில் போட்டியிட்டதோடு, தமது மூன்று மகன்கள் உட்பட 40க்கும் மேற்பட்ட உறவினர்களை தேர்தலில் நிற்க வைத்தார். இதேபோல ஆந்திராவின் பாசிச சன்னியாசி என்.டி.ஆரும் தமது மகன், மருமகன் உட்பட பத்துக்கும் மேற்பட்ட தமது உறவினர்களையே வேட்பாளர்களாக நிறுத்தினார்.



ஆந்திராவில் நடந்த தேர்தல் வன்முறைக்குப் பலியான அப்பாவி தொண்டர்.

இவர்களெல்லாம் போக, பதவி - அதிகாரச் சுவை கண்ட முன்னாள் குடியரசுத் தலைவர்களது வாரிசுகளும், முன்னாள் — இந்நாள் கவர்னர்களது வாரிசுகளும் 'மக்களுக்குச் சேவை செய்ய' தேர்தலில் வேட்பாளராக நின்றனர். கேரள கவர்னர் ராம் துலாரி சின்ஹாவின் மகன் மதுரேந்திர குமார்; மராட்டிய கவர்னராக உள்ள பிரும்மானந்த ரெட்டியின் மருமகன் கிருஷ்ணா; பீகார் கவர்னர் ஜெகந்நாத் பகாடியாவின் மனைவி சாந்தி; கோவா கவர்னர் குர்ஷித் ஆலம்கானின் மகனும் முன்னாள் குடியரசுத் தலைவர் ஹாகிர் உசைனின் பேரனுமான சல்மான் குர்ஷித்; பக்ருதின் அலி அகமதுவின் மனைவி அபிதா; வி.வி.கிரியின் மருகமள் மோகினி கிரி ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டனர். ஜனதா தள வேட்பாளர் அரிப் முகம்மது கானை எதிர்த்து முன்னாள் பீகார் கவர்னர் ஏ.ஆர்.கித்வாய் காங்கிரசு வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

இதே வகையில் பல எம்.எல்.ஏ.; எம்.பிக்களின் மனைவி - மகன் - உறவினர்களும் போட்டியிட்டனர். தமிழகத்தின் பெரணமல்லூரில் மறைந்த தி.மு.க. எம்.எல்.ஏ.வின் மனைவி வேட்பாளராக நின்றதைப் போல ஆந்திராவில் அண்மையில் கொல்லப்பட்ட பிரபல ரௌடியும், காங்கிரசு எம்.எல்.ஏவுமான மோகன ரங்காராவின் மனைவியும் சகோதரரும் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர்.

கொள்கைகளைப் பேசி ஓட்டுப் பொறுக்குவது ஒருக்காலும் சாத்தியமில்லை என்று முடிவு செய்துவிட்ட அனைத்துக் கட்சிகளும் சாதி - மத ஆதிக்கத்தின் அடிப்படையில் வேட்பாளர்களை நிறுத்தின. ஆந்திராவில் கவர்ச்சி வாதம் காலாவதியான நிலையில், 'கம்மா' சாதியின் வேட்பாளராகத் தான் என்.டி.ஆர். போட்டியிட்டார். கர்நாடகத்தில் வீரேந்திர பாட்டீலும், குண்டுராவும் 'லிங்காயத்து' சாதி ஆதிக்கத்தில் தான் போட்டியிட்டு வென்றனர். வடக்கே கன்ஷிராமின் கட்சி சாதி அடிப்படையில் தான் தேர்தலில் நின்றது. தேர்தல் வெற்றி வாய்ப்புகள் பற்றி பத்திரிக்கைகளின் ''அலசல் ரிப்போர்ட்டுகள்'' கூட, வேட்பாளர் எந்த சாதிக்காரர் - எவ்வளவு ஓட்டு விழும் என்ற அடிப்படையில்தான் இருந்தன. பாரதீய ஜனதாவும் சிவசேனையும் இந்து வெறியைக் கக்கிக் கொண்டு ஓட்டு வேட்டையாடுவதைக் கண்ட பீதியில், பாசிச ராஜீவ் கும்பல் பகல்பூரில் வகுப்புக் கலவரத்தைக் கட்டவிழத்து விட்டு ஓட்டுப் பொறுக்க முயன்றது. இந்துக்களின் ஓட்டுக்கள் பாரதீய ஜனதா பக்கம் திரும்புவதைக் கண்டு பீதியடைந்த ராஜீவ், ''இந்துக்களின் ராமராஜ்ஜியத்தை நிறுவுவோம்!'' என்று தேர்தல் காய்ச்சலில் உளறத் தொடங்கினார்.

இந்த உத்திகளோடு கூடவே சினிமா நடிகர் - நடிகைகளைக் காட்டி ஓட்டுப்



படிப்பகம்

www.padippakam.com

பொறுக்குவதில் எல்லா கட்சிகளுமே போட்டி போட்டன. தமிழகத்தில் ராதிகா, எஸ்.எஸ்.சந்திரன், ராதாரவி, பாண்டியராஜன், தீபா, மேஜர் சுந்தர்ராஜன், ராமராஜன், குண்டு கல்யாணம், பாக்கியராஜ், டி.ராஜேந்தர் என்று ஒரு பெரிய பட்டாளமே தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கியது. ஆந்திராவில் நடிகை ஜமுனாவும், நடிகர் கிருஷ்ணாவும் தேர்தலில் நின்று வெற்றியும் பெற்றனர். வடக்கே நடிகர் சுனில் தத் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றார். இந்தி நடிகர் சத்ருகன் சின்ஹா ஜனதா தள வேட்பாளர்களுக்காக சூறாவளி பிரச்சாரப் பயணம் மேற்கொண்டார். மொத்தத்தில், விதிவிலக்கின்றி கழிசடைகளே களத்தில் நின்றனர். இவர்களில் யாராவது ஒருவரைத்தான் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று!

தேர்தல் வெற்றிக்கு சாதி ஆதிக்கம், கவர்ச்சிவாதம், பரம்பரை ராஜ விசுவாசம் முதலானவற்றை மட்டும் ஓட்டுக் கட்சிகள் நம்பியிருக்கவில்லை. அவர்கள் பிரதானமாக நம்பியிருந்தது ஆயுத பலம்தான்! அதிலும் பாசிச ராஜீவ் கும்பல் தனது ஆட்சியைக் காப்பாற்ற - தேர்தலில் வெற்றிபெற பிலிப்பைன்சின் மார்க்கோஸ் வழியில் தில்லுமுல்லுகளும் மோசடியும் தான் ஒரே வழி என்று முடிவு செய்து வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. இதற்காகவே சிறையிலிருந்த பல கிரிமினல் பேர்வழிகள் விடுதலை செய்யப்பட்டனர். தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு 'உதவியாக' மேலும் இரு தேர்தல் அதிகாரிகள் ராஜீவ் அரசால் நியமிக்கப்பட்டனர். இவற்றையெல்லாம் எதிர்பார்த்து எதிர்க்கட்சிகளும் தயாரிப்புடன் இருந்தன.

கொள்கை அடிப்படையிலான அரசியலை வளர்க்க வேண்டும்; அரசியலில் கிரிமினல்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று பாசிச ராஜீவும் பரிசுத்தம் வி.பி.சிங்கும் தமது தேர்தல் பிரச்சாரங்களில் பிரகடனப்படுத்தினர். ஆனால் இருதரப்பினரும் பிரதானமாக கிரிமினல் - மாஃபியா கும்பலையே தேர்தல் வெற்றிக்காக சார்ந்திருந்தனர்.

மத்திய ராஜாங்க மந்திர கல்பனாத் ராய், பிரபல கிரிமினல் பேர்வழியும், 'சிறை மீண்ட செம்மலுமான' நாகேந்திரராய் என்ற குண்டர் படைத் தலைவனின் துணையோடு தேர்தல் களத்தில் நின்றார். உ.பி. செய்தித் துறை மந்திரியான நரேஷ் சந்திர சிரீவஸ்தா, குண்டர் படைத் தலைவர்களான சுக்லா, முகம்மது, தீட்சித் ஆகியோரைக் கொண்டு லக்னோவில் போட்டியிட்டார். உ.பி.யில் விதிவிலக்கின்றி அனைத்து காங்கிரசு மந்திரிகளும் கிரிமினல் - மாஃபியா குண்டர் படையின் உதவியுடன் தான் தேர்தலில் நின்றனர். இது தவிர பல கிரிமினல் வழக்குகளில் சிக்கியுள்ள குண்டர்களே சட்டமன்றத் தேர்தலில் பகிரங்கமாகப் போட்டியிட்டனர்.

அதேபோல, கடத்தல், கொள்ளை, கற்பழிப்பு குற்றங்களில் வழக்கு பதிவாகியுள்ள பிரபல கிரிமினல் பேர்வழி சரோஜ் பிரசாத், மோகன்லால் கஞ்ச் தொகுதியில் லோக்தள வேட்பாளராக போட்டியிட்டான். இன்னும் பாலேஷ்வர் யாதவ், கமலேஷ் பதக், சுக்பால் பாண்டே, அச்சல்சிங் முதலான பல கிரிமினல் பேர் வழிகள் லோக்தள வேட்பாளர்களாக போட்டியிட்டு வெற்றியும் பெற்றுள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக உ.பி.யின் லோக்தள தலைவர் முலயம் சிங் யாதவே ஒரு கிரிமினல் - மாஃபியா குண்டர் படைத் தலைவன். அவனும் சட்ட மன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுள்ளான். பீகாரின் கூட்டுறவுத் துறை மாஃபியா தலைவன் தபேஸ்வர் சிங், பிரபல மாஃபியா குண்டர் படைத் தலைவன் காளி பிரசாத் பாண்டே ஆகியோர் காங்கிரசு வேட்பாளர்களாக களத்தில் நிறுத்தப்பட்டனர். தேர்தலுக்கு சற்றுமுன், சமூக சேவகியைப் பாலியல் பலாத்காரம் செய்ய முற்பட்டு அம்பலமாகிப் போன காங்கிரசு கழிசடை மந்திரி அன்சாரி மீண்டும் போட்டியிட்டார்.

எதிர்பார்த்ததைப் போலவே, தேர்தலுக்கு முன்னரே ஓட்டுக் கட்சிகள் துப்பாக்கியால் பேசிக் கொண்டன. ம.பி; உ.பி; பீகார் ஆகிய மாநிலங்களில் வன்முறைத் தாக்குதல்களும் கொலையும் நடக்கத் தொடங்கியது. குஜராத்தில் ஓட்டுக்கட்சித் தொண்டர்களிடையே மோதல் தொடங்கி குண்டு வீச்சும், வாகன எரிப்பும் கொலையுமாக முற்றியது. சென்னையில் காங்கிரசு வழக்கறிஞர் சுப்பிரமணியன் தி.மு.க. குண்டர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் மாண்டு போனார். குஜராத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை மந்திரி கத்தியால் குத்தப்பட்டு மரணமடைந்தார். கர்நாடகாவில், பெங்களூர் ஜெயநகரில் போட்டியிட்ட ஜெயராஜ் என்ற மாஃபியா கும்பலின் தலைவன் போட்டி மாஃபியா குண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

தேர்தல் நாளன்று வன்முறையும் வெறியாட்டமும் மூர்க்கமாகமாகியது. கள்ள ஓட்டுப் போடுவது, வாக்குப் பெட்டிகளைச் சூறையாடுவது, வாக்காளர்களை துப்பாக்கி முனையில் விரட்டிவிட்டு குண்டர்களே மொத்தமாக வாக்குச்சீட்டுக்களில் முத்திரை குத்துவது என்ற அராஜகங்கள் ஆகப் பெரும்பான்மையான தொகுதிகளில் நடந்தன. பயபீதியூட்டும் வகையில் போலீசும் ராணுவமும் குவிக்கப்பட்டும் கூட அவர்கள் எதிரிலேயே அத்தனையும் நடந்தது. வி.பி. சிங் போட்டியிட்ட பதேபூர் தொகுதியில் காங்கிரசு குண்டர்கள் பகிரங்கமாக துப்பாக்கி ஏந்தியபடி வந்து வாக்காளர்களை விரட்டிவிட்டு தாங்களே மொத்தமாக ஓட்டுக்களை முத்திரை குத்திப்போட்டனர். செய்தியறிந்து வி.பி.சிங் வந்தபோது, துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே, பயபீதியூட்டி விட்டுத் தப்பியோடினர். நாடு முழுவதும் ஏறத்தாழ ஆயிரம் வாக்குச்சாவடிகளில் தில்லுமுல்லுகள், வன்முறை நடந்துள்ளதாக தேர்தல் கமிஷனே ஒப்புக் கொண்டு மறு வாக்குப் பதிவுக்கு உத்திரவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக ராஜீவ் போட்டியிட்ட அமேதி தொகுதியில் காங்கிரசு குண்டர்கள் தில்லுமுல்லு, மோசடி, வன்முறையின் உச்சிக்கே சென்றனர். தேர்தல் அதிகாரிகளும், போலீசும் இதற்கு உடந்தையாய் இருந்தனர் என்பதை அனைத்து பத்திரிக்கைகளுமே அம்பலப்படுத்தின. சென்ற தேர்தலில் கள்ள ஓட்டு முறையில் இந்தியாவிலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சஞ்சய்சிங், இம்முறை காங்கிரசு குண்டர்களால் சுடப்பட்டு உயிருக்குப் போராடுகிறார். அமேதியில் நடந்த வன்முறையைச் சாடி ராஜீவின் கலாச்சார ஆலோசகர் பதவி விலகினார்.

சுருக்கமாகச் சொன்னால் ஓட்டுச்சீட்டு ஜனநாயகமே துப்பாக்கி முனையில் தான் நிலைநிறுத்தப்பட்டது. இந்த வேட்பாளர் இவ்வளவு வாக்குகள் பெற்றார் என்பதை விட, இந்த வேட்பாளர் இவ்வளவு குண்டர்கள் - துப்பாக்கிகளை பெற்றிருந்தார் என்பது தான் வெற்றிக்கான அடிப்படையானது. மாவோ கூறியது போல துப்பாக்கி குழாயிலிருந்து தான் அரசியல் அதிகாரம் பிறந்தது. வாக்குப் பெட்டிகள் துப்பாக்கியால் துலைக்கப்பட்டன. வாக்குச் சீட்டுகளில் ரத்தக் கறை படிந்தது. 500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க ஏறத்தாழ 150 பேர் வரை தேர்தல் நேரத்தில் கொல்லப்பட்டனர். வரலாறு காணாத வன்முறைத் தேர்தல் என்று ஓட்டுக் கட்சிகளும் பத்திரிகைகளும் முதலாளித்துவ அறிஞர்களும் பகிரங்கமாக ஒப்புக்கொள்கின்றனர். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முக்கிய தூணாக கருதப்படும் தேர்தல் முறை கசாப்புக் கடைக்கு இழுத்து வரப்பட்டு அங்கம் அங்கமாக சிதைக்கப் பட்டு விட்டது. இனி அதன் தலையைச் சீவி உயிரை பறித்துவிடுவது தான் பாக்கி இருக்கிறது.

— குமார்.





ராஜீவின் அமேதி தொகுதியில் வீதியில் இறைந்து கிடக்கும் வாக்குச் சீட்டுகள்; காங்கிரசு குண்டர்களின் வன்முறை வெறியாட்டம்.

துப்பாக்கியால் சுடப்பட்டு உயிருக்கு போராடுவது சஞ்சய் சிங் மட்டுமல்ல; நாடாளுமன்ற ஜனநாயகத் தேர்தல் முறையும் தான்!



படிப்பகம்

www.padippakam.com




★ புதிய ஜனநாயகம் அமைப்பின் கொள்கை என்ன? உங்கள் கொள்கை மக்களை அடைய என்ன முயற்சி செய்துள்ளீர்கள்? மக்களிடம் உங்களது முயற்சிக்கு எந்த அளவு வரவேற்பு உள்ளது?

ஆர்.செல்வம், தஞ்சை

● ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு நமது நாட்டை அடகுவைத்து, அந்நிய ஏகபோகங்களுடன் கூட்டுச் சேர்ந்து கொள்ளையிடும் தரகு அதிகார முதலாளிகள், பழமையும் பிற்போக்குமான அரை நிலப்பிரபுத்துவ நிலையில் இந்தியச் சமுதாயத்தை அமுத்தி வைத்திருக்கும் நிலப்பிரபுக்கள். இவர்களின் சர்வாதிகார அரசியல், பொருளாதார அமைப்புதான் நமது நாட்டின் நமது மக்களின் அனைத்து அவலங்கள், துன்ப துயரங்களுக்கு மூல காரணமாகும். பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியின் மூலம் அதைத் தூக்கி எறிந்து ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவுவதற்காகப் பரந்துபட்ட மக்களை அணி திரட்டுவதுதான் புதிய ஜனநாயகத்தின் கொள்கை.

எவ்வளவுதான் இடையூறுகள் வந்தபோதும் இந்தக் கொள்கைக்காக இடையறாது பிரச்சாரம் செய்துவருகிறோம். இதற்காகப் பாடுபடும் புரட்சிகர அமைப்புகளுடன் தோளோடு தோள் நின்று போராடுகிறோம்.

சமரசமற்ற உறுதியும், தகுந்த சரியான முறையையும் கடைப்பிடிக்கும் போது மக்களிடமிருந்து மிகுந்த வரவேற்பைப் பெற முடிகிறது. கடந்த நான்காண்டுகளில் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் புதிய ஜனநாயகம் பரவியிருப்பதே இதற்கு ஆதாரமாக உள்ளது.

★ பு.ஜ. ஆசிரியர் என்ற முறையில் தங்களுக்கு, பத்திரிகைக்கு இந்த அரசு கொடுத்த தொல்லை - நெருக்கடி எதையும் குறிப்பாக சொல்லமுடியுமா?

● பத்திரிக்கையின் அச்சகத்துக்கு வந்து அவசியமற்ற, அதிகாரத் திமிருடன் கூடிய விசாரணையை இரகசியப் போலீசார் நடத்தியதுண்டு. பத்திரிக்கை அலுவலக இடச் சொந்தக்காரர்களையும், அண்டைக் குடியிருப்புக்காரர்களை தொடர்ந்து மூன்று நாட்கள் வந்து மிரட்டினார்கள். அவர்களைப் பத்திரிக்கை ஆசிரியர் நேரில் கண்டு, ''இப்படிச் செய்ய உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்று கேட்டதற்கு, ''அப்படிச் செய்யவில்லை; மேலதிகாரிகள் உத்திரவு, நாங்கள் என்ன செய்வது!'' என்று மழுப்பினார்கள். ''எங்களுக்கு உதவுங்கள்; சில தகவல்கள் கொடுங்கள்'' என்று நயந்து பேசினார்கள். தகுந்த பதிலடி கொடுத்தபின் போய்விட்டார்கள். அதன் பிறகு நேரடி விசாரணையோ, வேறு தாக்குதல்களோ இல்லை.

அப்படி நேரடித் தாக்குதல் தொடுப்பது, தன்னையே அம்பலப்படுத்தி எதிர்விளைவு, விளம்பரத்தை ஏற்படுத்தும் என்று கருதுவதாகத் தெரிகிறது. தஞ்சை குடமுருட்டி வெடிகுண்டு பொய் வழக்கில் அம்பலப்பட்டுப் போனது ஒரு படிப்பினையாக இருக்கலாம். ஆனால் மேலும் வலுவான சக்தியாக நாம் வளரும்போது, நேரடித் தாக்குதலுக்கும் தயங்க மாட்டார்கள். இப்போதே கீழ்மட்டத்தில் மிரட்டல், தாக்குதல், நெருக்கடி கொடுத்து பத்திரிக்கை விற்பனை, விநியோகத்தை முடக்க முயற்சிக்கிறார்கள். பல கடைக்காரர்களை மிரட்டி விற்கவிடாமல் தடுக்கிறார்கள். பொது இடங்களில் பத்திரிக்கை விற்கும் தோழர்களைத் தாக்குகிறார்கள், மிரட்டிப் பொய் வழக்குகள் போடுகிறார்கள் பத்திரிக்கைகள், விற்பனைத் தொகைகளைப் பிடுங்கிக் கொள்கிறார்கள். இத்தனையையும் மீறி அஞ்சாது பத்திரிக்கை விற்பனையில் நமது தோழர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

★ பலரையும் விமர்சித்து எழுதுகிறீர்களே! அதிகாரமுள்ள நபர் யாரேனும் உங்கள் வழியில் குறுக்கிட்டதுண்டா? இந்த வகையில் உங்களுக்கு மறக்க முடியாத சம்பவம் எது?

● பத்திரிக்கை ஆசிரியர், வெளியீட்டாளருக்கு நேரடியான குறுக்கீடு எதுவும் இதுவரை இல்லை. டி.வி.எஸ். முதலாளியின் ஆட்கள், திருச்சி கேம்பியன் பள்ளி பாதிரியார், தஞ்சை குரவபுலம் பண்ணையார் போன்றவர்கள் 'புதிய ஜனநாயகம்' தனது விமர்சனங்களுக்கு மன்னிப்புக் கோரியும், லட்சக்கணக்கில் மான நஷ்டட வழக்குகள் போடுவதாக மிரட்டியும் 'நோட்டீசு' அனுப்பினார்கள். ஆனால் நாம் தகுந்த பதிலடி கொடுத்ததும் பின் வாங்கிக் கொண்டார்கள். டி.வி.எஸ். முதலாளி தனது காரிலேயே ஒரு போலீசு கும்பலை ஏவி, புதிய ஜனநாயகம் ஏட்டிற்கு செய்தி அனுப்பியதாக சந்தேகித்த ம.க.இ.க. இணை செயலாளர் கதிரவன் வீடு புகுந்து சோதனை என்ற பெயரில் சட்டவிரோதமாக குறையாடினர்.

★ அநீதிகளை எதிர்க்கும் குணமுள்ள நமது இயக்கம் ஏன் ஒரு தொழிற்சங்கத்தை ஏற்படுத்தி, அரசு அலுவலகங்களில் நடக்கும் ஊழலைத் தட்டிக் கேட்க கூடாது?

ஆர்.சண்முகம், அரியலூர்

● செய்வோம்! சாத்தியமான விரைவில் இப்பணியை மேற்கொள்வோம்.




புதிய ஜனநாயகம் 5-வது ஆண்டு விழாவில் ஆசிரியர்.

★ முதலாளித்துவப் பத்திரிக்கைகள் இடையே புதிய ஜனநாயகம் பற்றி என்ன கருதுகிறார்கள்? புதிய ஜனநாயகம் என்றொரு பத்திரிக்கை வருவது பற்றித் தனக்குத் தெரியாது என்று 'சோ' சொல்லியிருப்பது பற்றி...?

ராஜகுரு, திருச்சி

● புரட்சிகர இயக்கத்தின் அரசியலை எப்போதுதான் நேர்மையாக அவர்கள் அங்கீகரித்தார்கள்! புரட்சிகர இயக்கம் ஒரு சக்தியாக வளரும்போது மக்களிடையே பீதியூட்டவும், அரசை எச்சரித்து அடக்கி ஒடுக்கும்படி கோரவும் தேவை ஏற்படும்போது 'தேசியப் பத்திரிகைகள்' எழுதுகின்றன. வழக்கமாக எழுதும் மஞ்சள் - மசாலா, அரசியல் கிசுகிசு, கிரிமினல் குற்றச் செய்திகளைப் போல வியாபாரச் சரக்காகப் பயன்படுமானால் புரட்சிகர இயக்கம் பற்றி 'உள்ளூர் ஏடுகள்' எழுதுகின்றன. இதே கருத்துதான் 'புதிய ஜனநாயகம்' பற்றி முதலாளித்துவப் பத்திரிகைகள் வைத்திருக்கின்றன.

வாசகரின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத ஓட்டாண்டித்தனம்; அதை மூடி மறைப்பதற்காகக் காட்டும் மமதை - ஆகியவை காரணமாகவே 'சோ' அவ்வாறு சொன்னார்!



படிப்பகம்

www.padippakam.com

★ விவசாயிகளைப் பற்றிப் பேசுகின்றீர்கள். மற்ற தொழிலாளர்கள் இதில் தீவிரமாக இறங்கக் கூடாதா?

● அப்படியில்லை! நமதுநாட்டின் பெரும்பான்மை உழைக்கும் மக்களாகிய விவசாயிகள் புரட்சியின் பிரதான சக்திகளாகவும், கிராமங்கள் புரட்சியின் மையங்களாகவும் விளங்குவதால் முக்கியத்துவமளிக்கிறோம். மற்றபிற புரட்சிகர வர்க்கங்களும், இதில் தீவிரமாக இறங்க வேண்டும். அவர்களை அணிதிரட்ட வேண்டும் என்று தான் கருதுகிறோம். குறிப்பாக பாட்டாளிவர்க்கத்தின் தலைமையின்றி புரட்சி வெற்றிபெற முடியாது என்பதால் வர்க்க ரீதியாக அதை அமைப்பாக்கிட வேண்டும். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம்.

★ ம.க.இ.க.வின் பிரிவாக தொழிலாளர் பிரச்சாரக் குழு பொன்மலை பணிமனை பகுதியில் தொழிலாளர்களின் பிரச்சினைகளை சந்தித்து அம்பலப்படுத்தி வருகிறது. அந்த தொ.பி. குழுவை தொழிற்சங்கமாகப் பதிவு செய்து முறைப்படி நடத்தப்படுமா?

குருதாஸ், பொன்மலை

● பொன்மலை மட்டுமின்றி மாநிலத்தின் வேறு சில இடங்களிலும் தொ.பி. குழுக்கள் இயங்குகின்றன. ஆலை மற்றும் அரசியல் அம்பலப்படுத்துதல்களையும் புரட்சிகர அரசியலையும் அவை முன்னெடுத்துச் செல்கின்றன. இதன் வளர்ச்சிப் போக்கில் தொழிலாளர் இயக்கங்களுக்குத் தலைமையேற்கும் கருக்குழுவையும், தொழிற்சங்கங்களையும் நிறுவுதற்கு முயலுகிறோம். ஏற்கனவே ஒருசில ஆலைகளில் தொழிற்சங்கங்களும் நிறுவியுள்ளோம். இந்தத் திசையில் நமது பணி தொடரும்.




புதிய ஜனநாயகம் 5-வது ஆண்டு விழாவில் ம.க.இ.க. இணைசெயலர் தோழர் கதிரவன்

★ ஈழப் பிரச்சினையை பற்றிய தங்கள் கட்டுரையில் தொடர்ந்த மாற்றமும், முதல் நிலைப்பாட்டிற்கு அடுத்த நிலைப்பாடு மாறியும் இருந்தது. இதற்கான காரணம் விளக்கவேண்டும்.

இலங்கை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பற்றிய நிலைப்பாடுகளும் இதே நிலைதான். இவரை பாசிஸ்டு என்று கூறியிருந்தீர்கள். பாசிசத்திற்கு பொருளாதார அடித்தளம் உள்ளதா? இல்லையா? அது என்ன?

ஈழப் பிரச்சினை பற்றிய இன்றைய நிலைப்பாடு என்ன?

பிரபாகரனை ஒரு நேரம் ஆதரிக்கிறீர்; ஒருநேரம் எதிர்க்கிறீர். ஈழப் போராளி பிரபாகரன் பற்றி பு.ஜ.வின் நிலைப்பாடு என்ன?

தெய்வீகன், கல்லைவட்டம்

● முதலாவதாக, எதிராளியின் கருத்துக்கள் அல்லாதவற்றை அவர் மீது திணித்துச் சாடுவது என்கிற 'நம்பூதிரித்தனம்'. இரண்டாவதாக, பருண்மையான நிலைமைகளுக்கேற்ப பருண்மையான அரசியல் விமர்சன ஆய்வுக் கண்ணோட்டத்தை வகுக்க முடியாத ஒட்டாண்டித்தனம். - ஆகியவை காரணமாக புதிய ஜனநாயகத்துக்கு எதிராக வைக்கபபடும் அவதூறு தான் முதல் கேள்விக்கு அடிப்படை.

இலங்கையின் தரகு அதிகார முதலாளித்துவ, அரை நிலப்பிரபுத்துவ சிங்கள இன வெறி பாசிச அரசுக்கு எதிராக பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சிதான் இன ஒடுக்குமுறை உட்பட அனைத்து இலங்கைப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைத் தீர்வும் திட்டமும் ஆகும். இதுதான் எப்போதும் எமது நிலைப்பாடாக இருந்திருக்கிறது.

அதேசமயம் அங்கே மோதிக் கொள்ளும் பல்வேறு சக்திகள் பற்றிய அரசியல் விமர்சன ஆய்வும், அவற்றின் சேர்க்கைகளிலும் இயக்கப் போக்குகளிலும் பருண்மையான நிலைமைகளிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப குறிப்பான போர்த் தந்திரக் கண்ணோட்டமும் அவசியம்.

இந்த விவகாரங்கள் எதற்குள்ளும் நுழையாது அடிப்படைத் தீர்வையும் திட்டத்தையும் திரும்பத் திரும்ப ஓதுவது; ஈழ மக்களுக்கு எதிராக சிங்கள அரசும், இந்திய ஆக்கிரமிப்புப் படையும் இழைக்கும் அக்கிரமங்களையும் நிகழ்ச்சிகளையும் எழுதுவது மட்டும் போதுமா? அப்படிச் செய்வது நமது இயலாமையையும், புரட்சிகரக் கடமையைச் செய்யத் தவறுவதையும் தான் குறிக்கும்! அப்புறம் மார்க்சிய - லெனினியம் ஜீவனுள்ளது என்பதையே பொருளற்றதாக்கி விடும்!

சக்திகளின் சேர்க்கை, இயக்கங்களின் போக்கு, பருண்மையான நிலைமைகள் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப நமது நிலைப்பாடுகளும் மாறுகின்றன. வெறுமனே நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வதாகவோ, ஒன்றுக்கொன்று முரண்பாடானதாகவோ அவற்றைப் பார்க்கக்கூடாது. அடிப்படைத் தீர்வு, திட்டத்துக்குப் பொருத்தமானதாக இருக்கிறதா என்றுதான் பார்க்கவேண்டும். அந்த வகையில் மிகவும் சரியான, முன்னோடியான நிலைப்பாடுகளை புதிய ஜனநாயகம் முன் வைத்து வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளுக்குத் தலைமையேற்கும் பிரபாகரன் கும்பல் பாசிஸ்டுகள் என்கிற எமது வரையறுப்பிலும் எவ்வித மாறுபாடும் கிடையாது. ''பாசிசம் என்றாலே நிதி மூலதன ஏகபோக ஆதிக்கம் உள்ள மேலை நாடுகளில் மட்டுமே உருவாக முடியும்'' என்கிற தவறான கருத்தின் அடிப்படையில் இந்த வரையறுப்பு மறுக்கப்படுகிறது. தேசிய இனவெறிதான் பிரபாகரன் தலைமையிலான பாசிச கும்பலின் அடிப்படை. குழந்தைகள், பெண்கள் உட்பட சிங்கள சிவிலியன்களையும், சக போராளிகளையும் அவர்கள் படுகொலை செய்வது அதனால் தான்!

ஆனால் எவ்வளவு பிற்போக்கானவர்களானாலும் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிடும் வரை அதற்கு ஆதரவு தருவது நமது கடமையாகிறது. எனவே இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்புக்குப் பிறகு விடுதலைப்புலிகளையும் ஏனைய ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராளிகளையும் ஆதரிக்கிறோம். அதேசமயம், புலிகள் அவ்வப்போது மேற்கொள்ளும் ஜனநாயக விரோதச் செயல்களைக் கண்டிக்கிறோம்.

★ புதிய ஜனநாயகம் பத்திரிக்கையைப் பிரச்சாரம் செய்து எடுத்துச் செல்லும்போது திமுக, அதிமுக, காங்கிரசு, போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் தாக்குதல் தொடுக்கின்றன. இதை எந்த விதத்தில் சமாளித்து எப்படி பிரச்சாரம் செய்வது என்பதைத் தெளிவுபடுத்தவும்.

தவமணி

● இப்படி அடிக்கடி நடக்கிறது. இதை எப்படிச் சமாளிப்பது என்பதற்கு உசிலை வி.வி.மு. தோழர்கள் நல்லதொரு வழிகாட்டி முன் மாதிரியாகத் திகழ்கிறார்கள். கம்பம் பஸ் நிலையத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் நமது தோழர்களைத் தாக்கினர். தோழர் ராமசாமியைத் தாக்கி செவிப்பறை கிழிந்தது. பத்திரிக்கைகள், பணம், சோற்று மூட்டையைப் பிடுங்கி விசிறியடித்தனர்.

நமது தோழர்கள் அஞ்சாது அங்கிருந்த மக்களிடையே போலிக் கம்யூனிஸ்ட்டுகளை அம்பலப்படுத்திப் பேசினர். மக்கள் ஆதரவு பெருகியது. தொடர்ந்து அந்த ஊரில் பிரச்சாரம் செய்தனர். பிறகு போலிக் கம்யூனிஸ்ட்டுகளே பஞ்சாயத்துப் பேச வரும்படியான நிர்பந்தம் ஏற்படுத்தினர். நமது அமைப்பே இல்லாத அந்தப் பகுதியில் காலூன்றுவதற்கு அச்சம்பவம் முக்கியமானதாக அமைந்தது.

தற்காத்துக் கொள்ளக்கூட போதிய சக்தியில்லாத போதும், எதிராளிகளின் தாக்குதலுக்கு அஞ்சாது அவர்களை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி மக்கள் ஆதரவைத் திரட்டுவதுதான் சிறந்த வழி!



படிப்பகம்

www.padippakam.com

## தேசிய முன்னணி அரசு:

# பதவி வெறியர்களின் ஆட்சி! பாசிச அபாயம் நீடிக்கிறது!

பாசிச ராஜீவ் கும்பலின் பரம்பரை ஆட்சி தூக்கி எறியப்பட்டுவிட்டது. அதன் கம்ப்யூட்டர் கணக்குகள், சோதிடர்களின் ஆருடங்கள் பொய்த்துவிட்டன. அது தன் தலைமீது கால் தாங்கி தேவ்ரா பாபாக்களிடம் பெற்ற ஆசிகள், மாந்த்ரீகர்களை வைத்து நடத்திய இரகசிய பூசைகள் ஆகிய எதுவும் பலிக்கவில்லை. வாக்காளர்களைக் கவர அடுத்தடுத்து சலுகைகளை வீசிய தந்திரங்கள், பத்திரிக்கை விளம்பரங்கள், இந்து - முஸ்லீம் மதவெறியர்களுக்கிடையே நடத்திய சந்தர்ப்பவாத, சாகச பேரங்கள், தொழில்முறை கிரிமினல்களை வைத்து நடத்திய வன்முறை வெறியாட்டங்கள் - தேர்தல் மோசடிகள் எல்லாம் தோற்றுப் போய்விட்டன. தேர்தலுக்கென்று அது வாரி இறைத்த 5000 கோடி ரூபாய் வீணாய் விரயமாகிப் போனது.

பாசிச ராஜீவ் கும்பல் ஏற்கனவே பல கிரிமினல் குற்றங்கள் புரிந்து நாட்டு மக்களின் கோபத்துக்குள்ளாகி இருக்கிறது. அவற்றோடு மக்களை அவமானப்படுத்தும் மேற்கண்ட இழிசெயல்களுக்கும் சேர்த்து அதை தண்டித்து விட்டார்கள். மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் அதன் பகற்கனவு கரைந்து போனது. இருந்தாலும் பாசிச ராஜீவ் கும்பலை நிரந்தரமாக, முற்றாகத் துடைத்தெறிந்து விடவில்லை. அதற்கு இன்னமும் நம்பிக்கையிருக்கிறது. ஏனெனில் எதிராளிகள் ஆட்சி நடத்திய மாநிலங்களில் படுதோல்வி அடைந்து விட்டார்கள்.

விந்திய மலைகளுக்கு நெடுக்காக ஒரு கோடு போட்டு வடக்கே காங்கிரசையும் தெற்கே அதன் எதிரிகளையும் நிராகரித்து விட்டார்கள். மாநிலங்களிலோ, மத்தியிலோ இப்போது ஆளும் கட்சிகள் எதற்குமே ஆட்சியில் இருப்பதற்கு அருகதை இல்லை என்று எதிர்மறையிலே தேர்தல் முடிவுகள் அமைந்து விட்டன.

இந்த நிலைக்கு என்ன காரணம்? காங்கிரசு ஏன் தோற்றுப் போனது? தொங்கு நிலை நாடாளுமன்றத்தினால் அரசியல் நிலைமைகள் என்னவாகும்? சிறுபான்மை அரசு நீடிக்க முடியுமா? அதன் போக்குகள் முன்னுரிமைகள் என்னென்ன? ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அரசியல் விமர்சகர்கள். அதே சமயம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பாசிச ராஜீவ் ஆட்சிக்கு வந்த போது செய்த அதே காரியத்தைத் துவங்கி விட்டன, நாட்டின் பிரச்சார சாதனங்கள். பதவி ஏற்றிருக்கும் வி.பி.சிங்கை சுற்றி தனிநபர் துதி மற்றும் தேசிய முன்னணி அரசு மீது நம்பிக்கையையும், பிரமையையும் வளர்க்கும் வேலை ஆரம்பித்துவிட்டது.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் மன்னிக்க முடியாத அடுக்கடுக்கான பல கிரிமினல், அரசியல் - பொருளாதாரக் குற்றங்கள் செய்துள்ளது பாசிச ராஜீவ் கும்பல்.

**பாசிச ராஜீவ் கும்பலின் குற்றங்கள் தேர்தல்களைத் தீர்மானித்த காரணிகள்:**

☆ 1984 நவம்பரில், இந்திரா கொலையை அடுத்து 5,000க்கும் மேற்பட்ட அப்பாவி சீக்கியர்களை வடஇந்திய நகரங்களில் கொன்று அந்த பிணங்களின் மீது ஏறி ஆட்சியில் அமர்ந்தது. கொலைக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு பதில் மந்திரி, எம்.பி. பதவிகள் அளித்து பாராட்டியது. ஆனால் இந்திரா கொலைக்கு சம்பந்தமில்லாதவர்கள் மீது சதிக்குற்றம் சாட்டி சித்ரவதைகள் செய்ததோடு நிரபராதியான கேஹார் சிங்கை தூக்கிலிட்டது.

☆ 1984 டிசம்பரில், 5,000 உழைக்கும் மக்கள் சாகவும், 3 லட்சம் பேர் நிரந்தர நோயாளிகளாகவும் செய்த போபால் விஷவாயு படுகொலைகளுக்கு காரணமான ஏகாதிபத்திய - பன்னாட்டுக் கம்பெனியுடன் ரகசிய பேரங்கள் நடத்தி குற்றவாளிகளைத் தப்புவிக்கச் செய்தது. நட்டஈடும் நல்வாழ்வும் இன்றி போராடும் அம்மக்களை அடக்கி ஒடுக்கியது.

☆ படுபிற்போக்கான முஸ்லீம் விவாகரத்து சட்டம் இயற்றி முஸ்லீம் மதவெறியர்களோடும், ராமஜென்ம பூமி / பாபரி மசூதியைத் திறந்துவிட்டு இந்து மதவெறியர்களோடும் கள்ள உறவாடியது. இப்படிப் பல காரியங்களைச் செய்து பிவாந்தி, மொராதாபாத், மீரட், பரோடா தொடங்கி கடைசியாக பகல்பூர் வரை பல இந்து - முஸ்லீம் கலவரங்களைத் திட்டமிட்டு தூண்டி பல ஆயிரம் அப்பாவி மக்களை தனது பதவி வெறிக்குப் பலியிட்டது.

☆ பஞ்சாபிலும், காஷ்மீரிலும் கிரிமினல் - போலீசு ரௌடிகளை கொண்டு இரகசியக் கொலைக் குழுக்களைக் கட்டி மாதம் இவ்வளவு பேரைக் கொல்ல வேண்டும் என்று இலக்கு வைத்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று அரசு பயங்கரவாதத்தை ஏவியது. பெரும் அணையின் வெள்ளத்தைத் திறந்து விட்டு கிராமம் கிராமமாக அழித்தது. பெண்களையும், குழந்தைகளையும் - சிறுவர்களையும், வயோதிகர்களையும் பயங்கரவாதக் குற்றம் சுமத்தி சிறையில் அடைத்தது.

☆ குறுகிய அரசியல் நோக்கத்துக்காக உளவுப்படையான "ரா"வை ஏவி திரிபுரா, அசாம் மலைவாழ் மக்களைத் தூண்டி இனப் படுகொலைகள் புரிந்தது. இதேபோல குஜராத்திலும், ஆந்திராவிலும் சாதிக் கலவரங்களைத் தூண்டியது.

☆ பயங்கரவாதத் தடைச்சட்டம், கலவரப் பகுதிகள் சட்டம், சிறப்புக் கோர்ட்டுகள் சட்டம், அவசரநிலை பிறப்பிக்கும் 59வது சட்டத்திருத்தம் போன்ற பல கறுப்புச் சட்டங்களால் தன்னை ஆயுதபாணியாக்கிக் கொண்



**பதவி வெறியர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள்**

நெஞ்சிலே வஞ்சகம்; முகத்திலே மகிழ்ச்சி. பதவிச் சண்டையில் இறங்கியுள்ள வி.பி. சிங், சந்திரசேகர் ஆகியோரின் போலி மரியாதை - பாராட்டு - பரிமாற்றம்



படிப்பகம்

www.padippakam.com

டது. அதன் அதிகார முறைகேடுகள், லஞ்சஊழலை அம்பலப்படுத்துவதைத் தடுக்க அவதூறு தடைச்சட்டம், மாநில உரிமைகளைப் பறிக்கும் பஞ்சாயத்து, நகரவைத் திருத்த மசோதாக்கள் ஆகியவற்றைக் கொண்டுவந்தது.

☆ ஏகாதிபத்திய, பன்னாட்டு கம்பெனிகளுக்குக் கதவை அகலத் திறந்துவிட்டு, கிராமப்புறங்களைப் புறக்கணிக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய கல்வி, மருந்து, துணி, தொழிலாளர் கொள்கைகளை அமுல்படுத்தியது. இந்துஜா, தபார், கோயங்கா, அம்பாணி, சாபிரியா போன்ற தரகு அதிகார முதலாளிகளுக்கு ஊழியம் செய்து ஆதாயம் அடைந்தது.

☆ ஆயுதங்கள், விமானங்கள், எண்ணெய்க் குழாய்கள், சர்க்கரை என்று பல வர்த்தகப் பேரங்கள் மூலம் கோடி கோடியாக லஞ்சம் வாங்கி — ஊழல் செய்து வெளிநாடுகளில் பதுக்கியும், முதலீடும்



இந்து மதவெறி ஆதிக்கம் பரவுகிறது:
வெற்றிக்களிப்பிலே கும்மாளமிடுகிறார்கள் இந்துமதவெறி பாரதீய ஜனதா அணிகள்

செய்தும் உள்ளது.

☆ அரசியல் - பொருளாதார கிரிமினல் குற்றங்களை மூடி மறைக்கவும், ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளவும் வேண்டி, நீதித்துறை, உளவுத்துறை, பிரச்சாரச் சாதனங்கள், பொதுத் தணிக்கை மற்றும் தேர்தல் கமிஷன் போன்ற சொல்லிக் கொள்ளும் எல்லா ஜனநாயக, அரசு நிறுவனங்களையும் கேடாகப் பயன்படுத்திக் கொண்டது; கொச்சைப்படுத்தியது.

☆ ஆதிக்க - விரிவாக்க நோக்கங்களுக்காக அண்டை நாடுகளை உருட்டி மிரட்டியதோடு, நேபாளத்தின் மீது பொருளாதார முற்றுகையும், இலங்கையின் மீது ஆக்கிரமிப்பு ஒப்பந்தத்தையும் திணித்தது. பல ஆயிரம் ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்தது.

☆ அரசியல் இடைத்தரகர்களையும், பிழைப்புவாத பொறுக்கி அரசியல்வாதிகளையும் வளர்த்ததோடு, தேர்தல் மோசடிகளை நடத்தி வெற்றி பெறவும், எதிராளிகளைக் கொல்லவும் தொழில்முறை கிரிமினல் குற்றவாளிகளை கட்சியில் சேர்த்துக் கொண்டது.

— இப்படி அடுக்கடுக்கான கிரிமினல் குற்றங்கள் புரிந்தாலும், குறிப்பாக ஆயுத பேர லஞ்சஊழலும், தேர்தல் சமயத்தில் பெரிதாக உருவெடுத்த விலைவாசியேற்றம் மற்றும் ராமஜென்ம பூமி / பாபரி மசூதி ஆகிய விவகாரங்கள் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன.

### புதிய ஆட்சியின் மீது மக்கள் நம்பிக்கை வைக்கலாமா?

எந்தக் கட்சிக்கும், கூட்டணிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை; தங்களுடையதுதான் இன்னமும் பெரிய, தேசிய கட்சி என்று கூறி பாசிச ராஜீவ் கும்பல் சமாதானம் சொல்லிக் கொள்கிறது.

ஆனால் லஞ்சஊழலும், அதிகார முறைகேடுகளும் நிறைந்த பரம்பரை ஆட்சிக்கு மக்கள் முடிவுகட்டி விட்டார்கள் என்று எதிர்த்தரப்பினர் குதிக்கின்றனர். ஜனநாயகம் வெற்றி பெற்றுவிட்டது; தேசிய பெருமை நிலைநாட்டப்பட்டு விட்டது என்று அவர்கள் எல்லோரும் பீற்றிக் கொள்கிறார்கள்.

லஞ்சஊழல் - அதிகார முறைகேடுகள், விலையேற்றம், வகுப்புவாதம் ஆகிய எந்தக் காரணங்களுக்காக பாசிச ராஜீவ் கும்பல் வீழ்த்தப்பட்டதோ, அது எதிர்த்தரப்பினருக்கும் பொருந்தும். எனவேதான் எதிர்த்தரப்பினர் ஆட்சியில் இருந்த மாநிலங்களில் அவர்கள் படுதோல்வியடைந்தனர். தேசிய முன்னணித் தலைவர்களான கருணாநிதி, தேவிலால், ராமராவ், ஹெக்டே, பிஜூபட்நாயக் ஆகியோரின் லஞ்சஊழல் விவகாரங்கள் ஊரறிந்தவை.

கருணாநிதி, தேவிலால், ராமராவ், அஜித்சிங் போன்றவர்களின் குடும்ப பரம்பரை ஆட்சிக்கான நடவடிக்கைகளை மறுக்கவே முடியாது. பதவி வெறிச்சண்டையினால் புழுத்துநாறும் ஜனதா தளத்துக்கோ, கர்நாடகா, அரியானா தவிர எங்குமே கட்சியமைப்புகள் கிடையாது. எலும்புக்கூடுதான் உள்ளது. ஆனால் ஆரம்பித்த ஓராண்டுக்குள் வடமாநிலங்களில் பெரும் வெற்றியடைந்ததற்குக் காரணம் அதன் வேட்பாளர்களில் பெரும்பான்மையினர் முன்னாள் அரசர்கள், ஜமீன்தார்கள்! மற்றவர்கள் காங்கிரசுக் கட்சிமாறிகள், அரசியல் பிழைப்புவாதிகள், கிரிமினல் குற்றவாளிகள்.

எனவே தான் காங்கிரசுக்கு ஈடுகொடுத்து பணத்தை வாரியிறைக்கவும், ஓட்டுச்சாவடிகளைக் கைப்பற்றவும் எதிர்த்தரப்பினருக்கு சாத்தியமானது. ஜனதா தளத்தை ஆதரிக்கும் கிருஷ்ணய்யர் - தார்குண்டே தலைமையிலான "சுதந்திர முன்முயற்சி" என்ற அமைப்பே இதை ஒப்புக்கொள்கிறது. 'காங்கிரசுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலே தேர்தல் வன்முறைகளில் ஜனதா தளம் ஈடுபட்டது' என்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஏடு எழுதுகிறது.

தேர்தல் வெற்றிக்காக மதக்கலவரங்களைத் தூண்டி ஆதாயம் அடையும் நடவடிக்கையில் காங்கிரசோடு போட்டி போட்டுச் செயல்பட்டது. தேசிய முன்னணியின் கூட்டாளியான பாரதீய ஜனதா, ஜனதா தளமே ஒட்டுப் பொறுக்குவதைக் குறிவைத்து அகிர், குஜ்ஜார், ஜாட் மற்றும் ராஜபுத்திரர் ஆகிய வடமாநிலங்களில் உள்ள நான்கு பெரிய சாதியினரின் கூட்டணிதான்! இதுதான் உலகிலேயே அதிக வித்தியாச ஓட்டுக்களில் சாதனை வெற்றி பெற்ற ராம்விலாஸ் பஸ்வான் தாழ்த்தப்பட்டவர் என்பதற்காக சீட்டுத்தர மறுத்து, அவர் கதறி அழுது பெற்றார்! விதவைப் பெண்களை உயிரோடு கொளுத்தும் சதி - உடன்கட்டைக் கொடுமையைத் தலைமையேற்று நடத்தும் கல்யாண்சிங் கல்விதான் ராஜஸ்தான் ஜனதா தள கட்சித்தலைவர். இப்படிப்பட்ட பிரமுகர்கள்தான் மதச்சார்பின்மை மற்றும் பிற முற்போக்கு நாடகமாடுகின்றனர்.

தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய முன்னணி மற்றும் அதன் தோழமைக் கட்சிகளின் திட்டங்கள், கொள்கைகளான தேர்தல் அறிக்கைகள் காங்கிரசினுடையதை விட எந்தவிதத்திலும் மாறுபாடனவை அல்ல. அக்கட்சிகளின் தலைவர்களே இதை ஒப்புக் கொள்கின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகள் தவிர மற்ற கட்சிகள் ஏகாதிபத்தியத் தரகு முதலாளித்துவ தொழில்களுக்கு தாராள வசதிகள், பொதுத்துறையை தனியாரிடம் ஒப்படைப்பது என்று பகிரங்கமாகவே சொல்கின்றன. எல்லாக்கட்சிகளுமே விலைவாசி குறைப்பு, வரிக்குறைப்பு, விவசாயிகளுக்குக் கடன் ரத்து, வேகமான தொழில் வளர்ச்சி, அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்று தாராளமான வாக்குறுதிகள் வழங்குகின்றனர்.

ஆனால் இவற்றை எப்படிச் சாதிக்கப் போகிறார்கள் என்பதற்கான நடைமுறைத் திட்டம் எவரிடமும் கிடையாது. சலுகைகளுக்கான வாக்குறுதிகளோடு, அரசுச் செலவையும், அந்நிய - உள்நாட்டுக் கடனைக் குறைப்பதாகவும் முன்னுக்குப் பின் முரணா



படிப்பகம்

www.padippakam.com

**பத்திரிகை செய்தி:**

## அவதூறுக்கு மறுப்பு!

**மா**நில அமைப்புக் கமிட்டி, இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)-யின் (SOC) முன்னணி அமைப்புகள் பற்றி ஓர் அவதூறு தினமணி, இண்டியன் எக்ஸ்பிரஸ், பம்பாயிலிருந்து வெளிவரும் 'தி இண்டிபெண்டட்' போன்ற நாளேடுகளில் வந்துள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம்.

திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் விவசாயிகளிடையே செயல்பட்டுக் கொண்டிருக்கும் எமது முன்னணி அமைப்புகள் காவிரி நீர்ப் பிரச்சினையை முன்வைத்து நிபந்தனை பூர்வமான ஆதரவை கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் சில தி.மு.க. வேட்பாளர்களுக்கும் அளித்துள்ளன என்ற பொய்ச் செய்தியை, யு.என்.ஐ. செய்தியை ஆதாரம் காட்டி இந்த ஏடுகள் வெளியிட்டிருந்தன.

இது யு.என்.ஐ. என்ற அரசு செய்தி நிறுவனம் புனைந்த கற்பனையே! ஆரம்பத்திலிருந்து தேர்தல் புறக்கணிப்பே எமது நடைமுறை என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறோம். ''போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்' புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி வகுப்போம்'' என்ற முழக்கத்தை மையமாக வைத்து பல்வேறு வடிவங்களில் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தை திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் எமது முன்னணி அமைப்புகள் வீரியத்துடன் எடுத்துச் சென்றன என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவர்.

இவண்,
**மாநில அமைப்புக் கமிட்டி,**
**இந்தியப் பொதுவுடமைக் கட்சி**
**(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்),**
**தமிழ்நாடு.**

---

**லஞ்சஊழலுக்கும் அதிகார முறைகேடுகளுக்கும் பழக்கப்பட்டுவிட்ட, அதிகாரவர்க்க, போலீசு, இராணுவ அரசு எந்திரம் பரிசுத்தம் என்று பட்டம் சூட்டிக் கொண்ட வி.பி.சிங் ஆட்சிக்கு வந்துவிட்டதால் தூய்மையானதாகி விடாது. பயங்கரவாத வெறியாட்டத்திற்கு பயிற்றுவிக்கப்பட்ட அது, ஜனதா தள ஆட்சி என்பதால் ஜனநாயகத்துக்கு இடங்கொடுத்து விடாது. பாசிச ஆட்சிக்குப் பாய்வதற்கே காத்திருக்கும்.**

---

கக் கூறுகின்றனர். 1,60,000 கோடி ரூபாய் உள்நாட்டுக் கடனும், 70,000 கோடி ரூபாய் அந்நியக் கடனும் உள்ள நிலையில் சலுகைகள் மேலும் பொருளாதாரத்தைப் புதைக்குழிக்குள் தள்ளும் என்று அறிந்தே புளுகுகிறார்கள்.

குறிப்பாக தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கைகளே ஒன்றுக்குப் பின் முரணாகவும், முக்கியப் பிரச்சினைகளில் நழுவிக் கொள்வதாகவுமே உள்ளது. பஞ்சாப், அயோத்தியா - வகுப்புவாதம், அது பெருங் கூச்சல் போடும் போஃபார்ஸ் ஒப்பந்தத்தை ரத்து செய்வதில்கூட நழுவிக் கொள்ளும் பொதுவான நிலைப்பாடுதான். அரசு நிறுவனங்களின் அதிகாரம் - தகுதியை நிலைநாட்டுவதாகவும், ''ரேடியோ - டி.வி'' போன்றவற்றை சுயாட்சி ஆக்குவதும், பஞ்சாயத்து - நகரவைகளுக்கு அதிகாரப் பகிர்வு என்று வாக்குறுதிகளை அடுக்குகிறது, இந்த அரசு. ஆனால் இந்தச் சீர்திருத்தங்கள் மூலம் அதிகாரவர்க்கத்திடம் முழுமையான ஆதிக்கத்தை ஒப்படைப்பது தவிர வேறெதுவும் நடக்காது.

பாசிச ராஜீவ் மேற்கொண்ட மக்களுக்கெதிரான கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள், நடவடிக்கைகளை ரத்து செய்வது; 1977-79 ஆண்டுகளில் ஜனதா ஆட்சி மேற்கொண்ட சில சில்லறை சீர்திருத்தங்கள்; மக்களைக் கவர எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஹெக்டே, கருணாநிதி, தேவிலால் மேற்கொண்ட சில கவர்ச்சிவாத இலவசத்திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள ஜனதா தள - தேசிய முன்னணி அரசு முயலும். இவையும் பாசிச ராஜீவ் காட்டிய ஆரம்ப சூரத்தனங்களைப் போலவே பிசுபிசுத்துப் போகும்.

ஏனெனில், இப்போது ஆட்சிக்கு வந்திருப்பது தரகு அதிகார முதலாளித்துவ, நிலப் பிரபுத்துவ வர்க்கங்களின் ஒருபிரிவினரின் பிரதிநிதிகளுக்குப் பதிலாக மற்றொரு பிரிவினர்தான். எனவேதான் புதிய அரசு பதவியேற்றதும் அம்பாணியின் ரிலையன்ஸ், லார்சன் அண்ட் டூப்ரோ கம்பெனிகளின் பங்கு மதிப்புகள் வீழ்ந்து வாடியாவின் பாம்பே டையிங் பங்கு மதிப்பு ஏறுகிறது. இப்படி எந்தப் பிரிவினரது தொழில்களைத் தாங்கிப் பிடிப்பது என்பதில்தான் ராஜீவ் - வி.பி.சிங் கும்பல்களுக்கிடையே வேறுபாடு - தகராறே தவிர அடிப்படைக் கொள்கைகளில் கிடையாது.

ஏகாதிபத்திய, தரகு அதிகார முதலாளிகளுக்குத் தாராள முதலீடு அனுமதி, வரிவிலக்கு, ஏகபோகத் தடைகளை அகற்றுவது, அன்னிய பாவனைப் பொருட்கள், தொழில் நுட்பம், முதலீடுகளுக்குத் தாராள அனுமதி, தனியார் - நவீனமயமாக்குவது தரகு அதிகார முதலாளிகளின் கூட்டு ஆலோசனையின் பேரில் தொழில் கொள்கைகள் - திட்டங்கள் வகுப்பது போன்றவை ராஜீவ் அமைச்சரவையில் வி.பி.சிங் நிதிமந்திரியாக இருந்தபோது கொண்டு வந்தவைதான்! ராஜீவுக்கும், வி.பி.சிங்குக்கும் பிளவு ஏற்பட்டு இருவருமே சோசலிச, முற்போக்கு முகமூடி போட்டுக்கொண்டார்கள்.

சொல்லப்போனால் 1977-'79 ஜனதா ஆட்சியிலே இந்தக் கொள்கைகள் துவங்கி விட்டது. கோகோ கோலா, ஐ.பி.எம். கம்ப்யூட்டர் கம்பெனிகளை விரட்டி சோசலிச, சுயசார்பு நாடகமாடிய அதே ஜனதா மந்திரி ஜார்ஜ் பெர்னான்டஸ்தான், அப்போதைய செயலாளர் பி.சி.அலெக்சாண்டர் தலைமையில் கமிட்டியமைத்து மேற்கண்ட தாராளவாதக் கொள்கைகளை வகுத்தார்.

எனவேதான் வி.பி.சிங் தலைமையிலான தேசிய முன்னணி - ஜனதா தள ஆட்சிக்கு வந்தபோது ஏகாதிபத்தியங்கள், நிலப்பிரபுக்கள், தரகு அதிகார முதலாளிகள் அனைவருமே வரவேற்றுள்ளனர் - மரியாதைக்காக அல்ல; கொள்கைப் பூர்வமாகத் தான்!

''இந்தியாவில் சுமுகமான ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருப்பதும், ஜனநாயகம் வலுவடைந்திருப்பதும், தேசிய முன்னணி ஆட்சி வந்திருப்பதும் குறித்து மகிழ்ச்சியடைகிறோம். ராஜீவோ, வி.பி.சிங்கோ யார் ஆள்கிறார்கள் என்கிற வேறுபாடு எங்களுக்கில்லை. எமது நலன்கள் இருவருடைய ஆட்சிகளிலும் பாதுகாக்கப்படும் என்று நம்புகிறோம்'' என்கிறது ஏகாதிபத்தியவாதிகளின் ஊதுகுழலான நியூயார்க் டைம்ஸ். இதே கருத்தை பம்பாய், கல்கத்தா தரகு அதிகார முதலாளிகளும் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் ஆட்சிக்கும், வி.பி.சிங் ஆட்சிக்கும் அடிப்படையில் வேறுபாடு இருக்காது: அணுகுமுறையில் அதாவது மக்கள் விரோத, ஜனநாயக விரோதக் கொள்கைகள் சூழ்ச்சியும் தந்திரமும் மிக்க நாசூக்கான முறைகளில் கொண்டு வரப்படும். அதுவும் பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆகிய இரு முரண்பட்ட கட்சிகளின் தயவிலே இந்த ஆட்சி தொங்கிக் கொண்டிருப்பதால் தான்! ஜனதா தளம் மற்றும் தேசிய முன்னணிக்குள்ளே கூட வேறுபட்ட நலன்களுக்கான குழுக்கள் இருப்பதால்தான்!

ஆனால் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் முற்றும்போது பகிரங்கமான மக்கள் எதிரியாக, ஜனநாயக விரோதியாக இந்த ஆட்சி திரும்பும். அப்போதும் எம்.ஜி. ஆரைப் போல வி.பி.சிங் தான் மட்டும் உத்தமன் என்ற அவதாரம் எடுத்து ஏய்க்கவே முயலுவார். ஜனதா தள - தேசிய முன்னணிக்குள் உள்ள இந்தத் தொங்குநிலையைப் பயன்படுத்திக் கொள்ள போலிக் கம்யூனிஸ்டுகளும், பாரதீய ஜனதாவும், ஜனதா தளத்தின் வெவ்வேறு கும்பல்களும் முயன்று அது வீழ்ந்துவிடும் நேரத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது பாசிச ராஜீவ் கும்பல். மேலும் அரசு எந்திரமே பாசிச தன்மையோடு வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்துமத வெறி பாரதீய ஜனதா - சிவசேனா - ஆர்.எஸ்.எஸ். கூட்டணியும் சக்தி வாய்ந்ததாக வளர்ந்துவிட்டது.

ஆகவே, இந்தத் தேர்தல்களும், ஆட்சி மாற்றமும், நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பாசிச அபாயத்தை நீக்கிவிடவில்லை. எனவே பாசிச அபாயத்தை எதிர்த்து ஜனநாயகத்துக்கான போராட்டத்தை நாம் தொடரவேண்டும்.

— ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்:

# ஓட்டுக் கட்சிகள் பீதி! உழைக்கும் மக்கள் ஆதரவு!

**ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் குறுகிய காலத்தில் அறிவிக்கப்பட்டாலும் ஓட்டுக் கட்சிகளை முந்திக் கொண்டு, தமிழகமெங்கும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, பகத்சிங் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தை சிறப்பாக முன்னெடுத்துச் சென்றன. கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது தேர்தல் புறக்கணிப்பு மாநாடு நடத்தி புதிய ஜனநாயக அரசியலை மக்களிடம் பதியவைத்தது போலவே, இம்முறை தோழர்களின் அயராத உழைப்பின் மூலம் தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் வீச்சுடன் எடுத்துச் செல்லப்பட்டது. தமிழகத்திலுள்ள இதர புரட்சிகர அமைப்புகளும் பிற மாநிலங்களிலுள்ள மார்க்சிய - லெனினிய புரட்சிகர அமைப்புகளும் எழுச்சியோடும் ஜனரஞ்சகமாகவும் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளன.**

★ ☆ ★

★ திருச்சியில் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி 6 பொதுக்கூட்டங்கள் நடந்தன. தினமும் மழையாயிருந்ததால் ஒரு சில கூட்டங்களில் பெருவாரியாக மக்கள் திரளாவிட்டாலும், வந்தவர்கள் ஒண்டிக் கொண்டு இறுதிவரை கேட்டனர். ம.க.இ.க. மாநில செயலர் தோழர் மருதையன், திருச்சி கிளை தோழர் தமிழ்மணி, பகத்சிங் இளைஞர் முன்னணி தோழர் ஜெகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தி.மு.க.கூட்டணி வேட்பாளரான போலிக் கம்யூனிஸ்டு டி.கே.ரங்கராஜன் ஓட்டுக் கேட்க வரும்போது நமது கூட்டம் நடந்து கொண்டிருந்ததும் தோழர்கள் தேர்தல் புறக்கணிப்புப் பாடலை நிறுத்தாமல் தொடர்ந்து பாடவே அவர் முகத்தில் கரி பூசப்பட்டது போல் ஆனார். அவரைப் பார்த்து மக்கள் சிரித்து கேலி செய்தனர்.

4 நாட்கள் சைக்களின் பிரச்சாரமும், 2 நாட்கள் வண்டி பிரச்சாரமும் திருச்சி நகரம் முழுவதும் நடத்தப்பட்டது. பல இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் செய்தபோது மக்கள் நூற்றுக்கணக்கில் திரளாக நின்று கேட்டு நிதியுதவி அளித்து ஆதரித்தனர். காங்கிரசு பிரமுகர் செந்தாமரை 'கை' சின்னத்துக்கு ஓட்டுக் கேட்டு வந்தபோது நாம் நடத்திய தெருமுனைக் கூட்டத்திற்குத் திரண்டிருந்த மக்களைப் பார்த்துவிட்டு நைசாக நழுவி விட்டார்.

தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி சுவரெழுத்துக்கள் பரவலாக எழுதப்பட்டன. தேர்தல் அறிவிப்பு வந்ததும் ஓட்டுக்கட்சிகளை முந்திக் கொண்டு எழுதியதும், திருச்சி நகரின் மலைக்கோட்டை நுழைவு வாயிலில் பெரிய அளவில் எழுதியதாலும் ஓட்டுக் கட்சிகள் அதிர்ச்சி அடைந்தன. ஆனாலும் எந்த இடத்திலும் அவற்றை அழிக்க அஞ்சின.

உள்ளூர் - வெளியூர் பேருந்துகளில் தினந்தோறும் நமது தோழர்கள் பிரச்சாரம் செய்து நன்கொடையும் வசூலித்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இப்பிரச்சாரம் சென்றடைந்தது. உள்ளூர் நகரப் பேருந்துகளில் தான் மக்கள் அதிகம் நிதியுதவி செய்தனர்.

தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்தை இவ்வாறு ஓட்டுக் கட்சிகளுக்கு நிகராக எடுத்துச் சென்றதையும், புரட்சிகர அரசியலுக்கும் அமைப்புக்கும் மக்கள் ஆதரவளிப்பதைக் கண்டு பீதியடைந்து போலீசும் காங்கிரசு கும்பலும் கூட்டுச் சேர்ந்து திருச்சியில் நேரு சிலையைக் குண்டு வைத்து தகர்க்கும் சதி நடவடிக்கையை அரங்கேற்றின. பழி நம் மீது சுமத்தப்பட்டு தோழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். இதனால் இறுதி நேரத்தில் தேர்தல் புறக்கணிப்பு இயக்கப் பணிகள் பாதிக்கப்பட்டன. எனினும் இச்சம்பவத்துக்குப் பிறகு நமது தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களை வெளியிட்டு அனைத்து பத்திரிக்கைகளும் போலீசின் கட்டுக்கதையை அப்படியே வாந்தியெடுத்ததால், ஒருவிதத்தில் இவர்கள் நமக்காக தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்வது போல் அமைந்தது.

★ கோவையில் போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி சுவரொட்டி இயக்கமும் தெருமுனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. நவம்பர் 20 அன்று மாலை 7 மணியளவில் ஒண்டிப்புதூர் சுங்கம் மைதானத்தில் ம.க.இ.க.வின் பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையைக் காரணங்காட்டி கடைசி நேரத்தில் போலீசார் கூட்டத்திற்கு அனுமதி மறுத்தனர்.

மக்களுக்கு பொறுப்பாக பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ள நமது அமைப்பு ஒலிபெருக்கியின்றி கூட்டம் நடத்த முற்பட்டது. உடனே போலீசார், சிறப்புரை ஆற்ற வந்திருந்த ம.க.இ.க. மாநில செயலர் தோழர் மருதையன், கோவை கிளை செயலர் தோழர் நசீம் இக்மத் உள்ளிட்டு 5 தோழர்களைக் கைது செய்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். நமது பிரச்சாரத்தை அரசியல் ரீதியாக எதிர்கொள்ளத் திராணியற்ற ஓட்டுப்பொறுக்கிகள் பேடித்தனமாக போலீசாரை ஏவி கூட்டம் நடத்தவிடாமல் செய்த சதியே இதற்குக் காரணம் என்று பின்னர் தெரிய வந்தது.

தோழர்களை போலீசார் அழைத்துச் செல்வதைக் கண்டதும் சுமார் 700க்கும் மேலான பொதுமக்கள் திரண்டுவிட்டனர். தோழர்கள் போலீஸ் நிலையம் வரை இக்கைதை எதிர்த்தும், கருத்துச் சுதந்திரம் கூட இல்லாத இன்றைய போலி ஜனநாயகத்தை அம்பலப்படுத்தியும் வீதியெங்கும் முழங்கியவாறே சென்றது நல்ல பிரச்சாரமாக அமைந்தது. பின்னர் தோழர்கள் இரவு 9 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

இதே போல, பாசிச எதிர்ப்பு மற்றும்

பம்பாயில் ''ஆவ்கான் நாட்டிய மஞ்ச்'' எனும் புரட்சிகர கலை இலக்கிய அமைப்பினர் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி நடத்தும் வீதி நாடகம்.



படிப்பகம்

www.padippakam.com



''தேர்தல் செப்பிடுவித்தை கூடாது; மக்கள் திரள் புரட்சியே வேண்டும்'' என்ற முழக்கத்தை முன்வைத்து பாட்னா நகரில் 'லோக் சங்க்ராம் மோர்ச்சா' என்ற அமைப்பு நடத்திய ஊர்வலம்.

தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டத்தை நவம்.12 அன்று நடத்த அனுமதி கேட்ட தோழமை அமைப்பான மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்துக்கும் போலீசார் அனுமதி தர மறுத்தனர். பொதுக்கூட்டத்துக்கு அனுமதி பெறுவது என்ற காலனிய கால கறுப்புச் சட்டத்தைக் கூட எதிர்த்துப் போராட வக்கற்ற ஓட்டுப் பொறுக்கிகள், நாட்டில் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் மீட்கப் போவதாக பம்மாத்து செய்வதைக் கண்டு மக்களே எள்ளி நகையாடினர்.

★ கடலூரில் ம.க.இ.க. சார்பில் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி மையமான இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு இடத்திலும் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து ஆதரவினை நல்கினர். 16.11.89 அன்று மஞ்சக்குப்பம் தண்ணீர் தொட்டியருகே போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி எழுச்சிமிகு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்திற்கு தோழர் சக்கரை தலைமையேற்க, ம.க.இ.க. சென்னை கிளை தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். தேர்தலை ஏன் புறக்கணித்து, புரட்சிக்கு அணி திரளவேண்டும் என்பதையும், புதிய ஜனநாயக அரசு எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதையும் தோழர் தெளிவாக விளக்கினார். ஏறத்தாழ 400க்கும் மேற்பட்ட பொது மக்கள் திரண்டு வந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். இறுதியில், மழை பெய்யத் தொடங்கிய போதிலும், தோழர்கள் புரட்சிகரப் பாடல்களைப் பாடி நிகழ்ச்சியை முடிக்கும் வரையிலும் இருந்து மக்கள் ஒத்துழைப்பை நல்கினர். பின்னர், தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார சைக்கிள் ஊர்வலத்துக்கு போலீசார் ஒலிபெருக்கி மூலம் பிரச்சாரம் செய்ய அனுமதி மறுத்ததாலும், தொடர்ந்து பெய்த இவைிடாத மழையின் காரணமாகவும் பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்த இயலவில்லை. ஆயினும் சுவரொட்டி மூலம் நாம் மேற்கொண்ட பிரச்சாரம் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

★ திருவண்ணாமலை வட்டத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி சுவரெழுத்து, சுவரொட்டி, தெருமுனைக்கூட்டங்கள், சைக்கிள் ஊர்வலம் என பல வடிவங்களில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை கிராமப்புறங்களில் முனைப்புடன் முன்னெடுத்துச் சென்றது. பின்னர் மங்கலம் கிராமத்தில் எழுச்சிகரமாக பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் வேடிராசு தலைமையில் தோழர் பழனி, ம.க.இ.க. தோழர் கலாநிதி ஆகியோர் தேர்தலைப் புறக்கணித்து, புரட்சிக்கு அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கி சிறப்புரையாற்றினர். இடையிடையே உள்ளூர் தோழர்களின் புரட்சிகர கலைநிகழ்ச்சி நடைபெற்றது. ஏறத்தாழ 300லிருந்து 500க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு நமது பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்தனர்.

★ கம்பம் நகரில் புதிய ஜனநாயக வாசகர் கூட்டம் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்தை முனைப்புடன் முன்னெடுத்துச் சென்றது. 10ந் தேதியன்று பொதுக்கூட்டம் நடத்த போலீசிடம் விண்ணப்பித்திருந்த நிலையில் 9ந் தேதியன்று மாலை தோழர் வசந்தனை போலீசார் அழைத்துச் சென்று போலீஸ் நிலையத்தில் பொதுக்கூட்ட அனுமதி மறுக்கப்படுவதாக எழுத்து மூலம் அறிவித்தனர். பின்னர் மாவட்ட போலீஸ் ஆணையாளரிடம் கூட்டம் நடத்த அனுமதி கோரி முயற்சித்தும் பலனளிக்காமல் போகவே, குறிப்பிட்ட அதே நாளில் ஒலிபெருக்கின்றி கூட்டம் நடைபெறும் என்று தோழர்கள் விளம்பரப் பலகை எழுதி வைத்தனர். நவம்பர் 10 அன்று கூட்டம் நடக்கும் இடத்தில் பெருமளவில் போலீசார் குவிந்து பீதியூட்டினர். நீங்கள் கூட்டம் போட உரிமையில்லை என்று எஸ்.ஐ. கூறினார். பின்னர் தோழர்கள் நீண்ட நேரம் வாதிட்ட பிறகு ஒரு மணி நேரம் மட்டும் தெருமுனைக் கூட்டம் நடத்த அனுமதித்தார். அந்த ஒருமணி நேரத்தில் தோழர்கள் எடுப்பாக பிரச்சாரமும் கலைநிகழ்ச்சியும் நடத்தினர். சுமார் 200க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு நிகழ்ச்சியை வரவேற்று ஆதரித்தனர்.

★ உத்தமபாளையம் வட்டத்தில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை விவசாயிகள் விடுதலை முன்னணி கிராமப்புறங்களில் முனைப்புடன் முன்னெடுத்துச் சென்றது. சிறிய சக்தியாக இருந்தாலும் ஓட்டுக் கட்சிகளுக்கு இணையாக போட்டி போட்டுக் கொண்டு சுவரெழுத்து, சுவரொட்டி, பிரசுரம், பொது இடங்களில் தட்டி எழுதி வைத்தல் என பல வடிவங்களிலும் புரட்சிகர அரசியலை மக்களிடம் எடுத்துச் சென்றது. பின்னர் தேவாரத்தைச் சுற்றியுள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சைக்கிளில் ஊர்வலமாகச் சென்று தெருமுனைக் கூட்டங்கள் நடத்தி பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

கோம்பையில் பொதுக்கூட்டம் நடத்த முன்கூட்டியே விண்ணப்பித்திருந்த போதிலும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டி போலீசார் கடைசி நேரத்தில் அனுமதிதர மறுத்தனர். இது சரியான காரணமல்ல என்று கூறி உத்திரவு படிவத்தில் வி.வி.மு. தோழர் மருதமுத்து கையெழுத்திட மறுத்து விட்டார். பின்னர் கம்பம் நகரில் மீண்டும் 17ந் தேதியன்று கூட்டம் நடத்த தோழர்கள் ஏற்பாடு செய்தனர். ஆனால் போலீசார் கடைசி நேரத்தில் அனுமதி தர மறுத்தனர். எனினும், அதே நாளில் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி தோழர்கள் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சென்றனர்.

★ சென்னையில் சைக்கிளில் ஊர்வலமாகச் சென்று ஆங்காங்கே தெருமுனைக் கூட்டங்கள் மூலம் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் சிறப்பாக நடைபெற்றது. பகுதியில் பாதிக்கும் மேற்பட்ட சாலைகளில் முழங்காலளவு நீர் தேங்கி நின்றது. எந்த ஓட்டுப் பொறுக்கிகளும் நுழையாத இடங்களில் நாம் சென்று பிரச்சாரம் மேற்கொண்டோம். மக்கள் நல்ல வரவேற்புத் தந்து தாராள நிதியுதவியும் செய்தனர்.

16.11.89 அன்று வில்லிவாக்கம் பேருந்து நிலையமருகே பொதுக்கூட்டம் நடந்தது. கல்லை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் கதிர்வேலனும், புதிய ஜனநாயக ஆசிரியரும் சிறப்புரையாற்றினர். ஆசிரியர் பேசுகையில் ஓட்டுப் பொறுக்கிகள் சுமார் 10,000 கோடி ரூபாயை வாரியிறைத்து எப்படிப்பட்ட விரோதச் செயலை அரங்கேற்றிக் கொண்டுள்ளனர் என்பதை தோலுரித்தார்.

தோழர் கதிர்வேலன் ஓட்டுப் பொறுக்கிகளின் லட்சணங்களை அம்பலப்படுத்திய போது ஆத்திரமடைந்த ஓட்டுப் பொறுக்கிகள் ஒன்று சேர்ந்து 'யார் இதற்கு அனுமதி தந்தது? கூட்டத்தை நிறுத்த வேண்டும்' என காவல் நிலையம் சென்று உதார் விட்டதை, கூட்டத் தலைவர் அப்போதே மேடையில் அம்பலப்படுத்தினார்.

பேச்சினைக் கேட்ட உழைக்கும் மக்களில் சிலர், 'சரியான - தெளிவான பேச்சு இன்னும் பரவலாக இப்படிப்பட்ட பொதுக்



படிப்பகம்

www.padippakam.com

## பாசிச எதிர்ப்பு - தேர்தல் புறக்கணிப்பு
## மாநில கூட்டரங்கம்

மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தின் பாசிச எதிர்ப்பு மற்றும் நாடாளுமன்ற தேர்தல் புறக்கணிப்பு மாநிலக் கூட்டரங்கம் 19.11.89 அன்று தருமபுரி நகரில் தோழர் பாலன் அரங்கத்தில் (செங்குந்தர் கல்யாண மண்டபம்) நடைபெற்றது. தருமபுரி மாவட்ட கிராம நகர வீதிகளெங்கும் சுவரெழுத்து, சுவரொட்டி, தட்டி பிரச்சாரங்கள் உழைக்கும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் அழகுடன் மிளிர்ந்தன.

மக்கள் ஜனநாயகப் புரட்சிக்கான களப் போராட்டத்தில் துடிப்போடு செயலாற்றி, ஏறக்குறைய 15 ஆண்டுகள் சிறைத்தண்டனைப் பெற்று அண்மையில், விடுதலையாகி வெளிவந்துள்ள தோழர் திம்மக்காளி அவர்கள் ம.ஜ.இ.க. செங்கொடியை ஏற்றிவைத்து வாழ்த்திப் பேசினார். தோழர் நயினாதுரை தலைமையில் கூட்டரங்கம் தொடங்கியது.

தொடக்கத்தில் 'சமரன்' ஆசிரியர் தோழர் இல.கோவிந்தசாமி வாழ்த்துரை வழங்க, அடுத்துவந்த தோழமை அமைப்பான மக்கள் கலை இலக்கியக் கழக மாநில செயலாளர் தோழர் மருதையன் பேசுகையில், "இன்றைய சூழலில் பாசிச எதிர்ப்பையும் தேர்தல் புறக்கணிப்பையும் இணைத்துச் செய்வது சரியானது, பொருத்தமானது" என்றார்.

ம.ஜ.இ.க.வின் பல்வேறு மாவட்ட பிரதிநிதிகள் வாழ்த்துரை வழங்க இடையிடையே ம.ஜ.இ.க. மற்றும் ம.க.இ.க. குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி எழுச்சிகரமாய் இருந்தது. கூட்டரங்கத்தின் அடுத்த கட்ட நிகழ்ச்சியாக "ராஜீவின் பாசிசமும் அதன் பொருளியல் அடிப்படையும்" என்ற தலைப்பில் சென்னை மாவட்ட ம.ஜ.இ.க. தோழர் மனோகரனும், "பாசிசத்தின்பால் பல்வேறு அரசியல் கட்சிகளின் நிலைபாடும் பாட்டாளி வர்க்க நிலைபாடும்" என்ற தலைப்பில் ம.ஜ.இ.க. மாநில அமைப்பாளர் தோழர் ஞானமும், "தேர்தல் புறக்கணிப்பு ஏன்?" என்ற தலைப்பில் சேலம் மாவட்ட ம.ஜ.இ.க. தோழர் திலீபனும் மிக விரிவாக விளக்கஉரை ஆற்றினார். கூட்டரங்கத்தின் இறுதியில் சென்னை மாவட்ட ம.ஜ.இ.க. அமைப்பாளர் தோழர் மணி, போலி நாடாளுமன்ற தேர்தலைப் புறக்கணித்து, புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளவேண்டிய அவசியத்தைக் கூறும் தீர்மானத்தை வாசித்தார். அரங்கத்தில் அமர்ந்திருந்த 550க்கு மேற்பட்ட ம.ஜ.இ.க. வின் முன்னணிச் செயல்வீரர்கள் கரவொலி எழுப்பி ஆமோதித்தனர். மாலை 6 மணிக்கு சர்வதேச கீதத்துடன் கூட்டரங்கம் முடிவடைந்தது.

மாலை 6 மணிக்கு தோழர் பாலன் நினைவரங்கத்திலிருந்து எழுச்சிமிக்க ஊர்வலம் தொடங்கியது. தருமபுரி மாவட்ட ம.ஜ.இ.க. அமைப்பாளர் தோழர் வில் கிருஷ்ணன் தலைமையில் ஊர்வலம் உயர்த்திய செங்கொடிகள், பதாகைகள் சகிதமாய் சிவப்பு ஆறாய் நீண்டது. "போலி பாராளுமன்ற தேர்தலைப் புறக்கணிப்போம்! பாசிச ராஜீவ் கும்பலை தூக்கியெறிவோம்! ராஜீவ் கும்பலுக்கு மாற்று தேசிய முன்னணி அல்ல! மக்கள் ஜனநாயக முன்னணியே" போன்ற அரசியல் முழக்கங்கள் விண்ணதிர எழுந்து திரிபுவாதிகள், ஆளும்வர்க்க அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற மாய்மாலத்தை வெடித்துப் பொசுக்கியது. ஊர்வல வீதிகளில் முழக்கங்களால் ஈர்க்கப்பட்ட ஆயிரமாயிரம் மக்கள் கூடிநின்றனர். இறுதியில் ஊர்வலம் தருமபுரி கே.ஆர்.எம்.எஸ். திடலை அடைந்தது.

மாலை 7 மணிக்கு தருமபுரி மாவட்ட ம.ஜ.இ.க. செயலாளர் தோழர் சின்னு தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது. தோழர்கள் மனோகரன், நயினாதுரை, மணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார். ம.ஜ.இ.க. மற்றும் ம.க.இ.க. தோழர்களின் கலை நிகழ்ச்சி சிறப்பாய் நடந்தேறியது. தருமபுரி மாவட்ட அமைப்பாளர் நன்றி கூற பொதுக்கூட்டம் முடிவடைந்தது.

**தகவல்: மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், தமிழ்நாடு**

---

கூட்டம் நடத்தப்பட வேண்டும். அதற்கு நாங்களும் உதவத் தயார்' என அமைப்பாளரை சந்தித்தபோது கூறினர்.

நமது தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டிகள் நகர மின்சார ரயில் வண்டிகளிலும், பகுதியில் மக்கள் அதிகமாகக் கூடுமிடங்களிலும் ஒட்டப்பட்டு இன்றுவரை நமது புரட்சிகர அரசியலை அறைகூவி, பளீரென பளிச்சிடுகிறது.

★ **கல்லை** வட்டத்தில் "இது கொள்ளையருக்குள் நடக்கும் போட்டி! இதில் ஏழைக்கு எங்கே கிடைக்கும் நீதி? தேர்தலைப் புறக்கணி! புரட்சிக்கு அணிவகு!" என இந்தப் பகுதி முழுவதும் சுவரெழுத்துக்களை எழுதி தேர்தல் புறக்கணிப்புப் பணியில் எழுச்சிகரமாக ஈடுபட்டது வி.வி.மு. சுவரெழுத்து வாசகங்கள் ஓட்டுக் கட்சிகளை திகிலடையச் செய்ததால் ஒரு சில ஊர்களில் தி.மு.க. ரவுடிகளால் தகராறுக்குட்பட்ட போதிலும் பெரிய அளவுக்கு பணி பாதிப்பின்றி இறுதிவரை உத்வேகமாக இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

மைய ரீதியில் திட்டமிடப்பட்ட பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக பெருந்திரளான மக்களிடையே எழுச்சிகரமாக நடத்தப்பட்டது. கடலூர் ம.க.இ.க தோழர் கலாநிதியின் சிறப்புச் சொற்பொழிவும் பகுதி தோழர் நாகராசனின் உரையும் பகுதி அமைப்பாளர் தோழர் கதிர்வேலனின் பகுதி நிலைமையை ஒட்டிய அரசியல் உரையும் மக்களால் வெகுவாக வரவேற்கப்பட்டது. கலை நிகழ்ச்சிகளை வரவேற்ற மக்கள் போலீசைப் பற்றிய பாடலை கரகோஷத்துடன் ஆதரித்தனர்.

பகுதியிலுள்ள 15 கிராமங்களை இணைத்து சைக்கிள் பிரச்சார ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. முழக்கங்கள் உணர்ச்சிகரமாக மக்களின் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் அமைந்திருந்தன.

இயல்பாகவே வாக்காளர்களுக்கு ஓட்டுப் போடுவதில் ஆர்வமில்லாத போக்கு தென்பட்டது. கள்ள ஓட்டுக்களையெல்லாம் சேர்த்தும் கூட பாதி ஓட்டு கூட பதிவாகவில்லை. இதில் ஒரு கணிசமான பங்கை நமது பிரச்சாரம் ஆற்றியிருக்கிறதென்பதை தேர்தலுக்குப் பின் மக்கள் நம்மிடம் கூறும் செய்திகளிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

★ நெய்வேலி - மந்தாரக்குப்பம் பகுதியில் தொழிலாளர் பிரச்சாரக் குழு(வடலூர் - நெய்வேலி)வின் சார்பாக தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் கலைச்சித்தன் தலைமையேற்க, ம.க.இ.க. வின் மாநிலப் பொருளாளர் தோழர் காளியப்பன் அவர்களும், ம.க.இ.க.வின் சென்னை பகுதி அமைப்பாளர் தோழர் சீனிவாசன் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். ஓட்டுக் கட்சிகளின் துரோகத் தொழிற்சங்கத்தை அம்பலப்படுத்தியும், தேர்தலைப் புறக்கணித்து புரட்சிப் பாதையில் 'புரட்சிகரத் தொழிற்சங்கத்தில் - அணி திரளுமாறும் உரை நிகழ்த்தப்பட்டது. மக்கள் மழையையும் பொருட்படுத்தாது இறுதிவரையில் இருந்து பொதுக் கூட்டத்தை வரவேற்றனர். முன்னதாக நடந்த தெருமுனைக் கூட்டங்களில் போலீசின் இடையூறையும் மீறி மக்கள் ஆதரவளித்தது தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்திற்கு உத்வேகமளித்தது.

★ **வேலூரில்** - ம.க.இ.கவின் சார்பாக, சத்துவாச்சாரியில் தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் அமரன் தலைமையேற்க தோழர் தங்கராசு சிறப்புரையாற்றினார். மக்களுக்கு அதிகாரமற்ற இந்த போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டியதன் அவசியத்தையும், புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள வேண்டியதன் அவசியத்தையும் பற்றி நிகழ்த்தப்பட்ட உரையை மக்கள் ஆர்வத்தோடும் ஆச்சரியத்தோடும் இறுதிவரை கேட்டு ஆதரித்தனர். மாட்டு வண்டியையே மேடையாகப் பயன்படுத்திய எளிமையை மக்கள் பாராட்டினர். மனமுவந்து பலர் நன்கொடை தந்துதவினர். தேர்தல் புறக்கணிப்பு சைக்கிள் ஊர்வலத்திற்கு இடையூறு செய்யும் விதமாக போலிக் கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. சுந்தரம் பேசியதை மக்கள் புறக்கணித்தனர். சில இடங்களில் மக்களே ஆர்வத்தோடு அழைத்து தங்கள் பகுதியில் கூட்டம் நடத்துமாறும் கேட்டுக் கொண்டனர். ●

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, இது நவம்பர் 14ந் தேதியோடு முடிவடைந்த 8வது ஆசிய தட-கள போட்டி முடிவு நிகழ்ச்சியின் ஒரு சிறுகாட்சி! டில்லி ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தின் கடல் போன்ற பரந்த மைதானத்தில் வண்ணப் பூக்களை வானத்திலிருந்து 3 ஹெலிக்காப்டர்கள் தூவியது. முதன் முறையாக விளையாட்டு இறுதிக் காட்சிகளில் பெரும் பொருட்செலவில் மேற்கத்திய 'ராக்' இசை நிகழ்ச்சி சேர்க்கப்பட்டது.

சினிமாவில், வெண் மேகங்களுக்கிடையே 'தேவதை'கள் 'ரிப்பனை' ஆட்டிக் கொண்டு வருவது போல 'ராக்' இசை நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. உலக பிரபல 'ராக்' பாடகி சரோன் பிரபாகர், நீராவி பீச்சியடித்த செயற்கை வெண் மேகங்களுக்கிடையே பனை உயர மேடையில் மிதந்து ரசிகர்களை கிறங்கடித்தார். 18 வயதினருக்கும் ஓட்டுரிமைக் கொடுத்ததால், காங்கிரசுக் கட்சி இளைஞர்களிடம் ஓட்டுப் பொறுக்க 'சிறப்பு' கவனத்துடன் இந்நிகழ்ச்சிகளை தயாரித்தது. நேரு நூற்றாண்டு விழாவையும் இதோடு இணைத்து ராஜீவ் காந்தியை விழாவின் கதாநாயகனாக மாற்றினார்கள். இந்தியா முழுக்க 7,000 பள்ளிக் குழந்தைகளை ஓட்டி வந்தனர். மழலைகள் தேச பக்தியோடு தங்களது குழுநடன அற்புதங்களைக் காட்ட, அதை காங்கிரசு தனது மலிவான விளம்பரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டது





ராஜீவ் காந்தியிடம் கொடுக்கபட்ட 'ஜவகர் ஜோதி' உட்பட அனைத்து இறுதி நிகழ்ச்சிகளையும் பல்வேறு தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் தமது சொந்தப் பொறுப்பில் எடுத்து நடத்தி, காங்கிரசுக் கட்சிக்கும் தமக்கும் விளம்பரம் தேடிக்கொண்டன. ஆனால் அந்நிகழ்ச்சிகளின் தயாரிப்பு செலவுக்காக அரசு செய்த செலவோ பலகோடி ரூபாய்கள்! 1,000 'ஜிம்னாஸ்டிக்' வீரர்கள் இறுதி நாள் அணிவகுப்பில் கலந்து கொள்ள 5 நாள் பயிற்சிக் கொடுக்க அரசுக்கான செலவு மட்டும் ஒரு கோடி ரூபாய்!

இதோ, அதே நாட்களில் மக்கள் வெள்ளத்திற்கும் பெரும் புயலுக்கும் ஆளாகி உடமைகளையும் உயிரையும் இழந்து கொண்டிருந்த அவலம்! குறிப்பாக தென்னாட்டில், ஆந்திராவில் மட்டும் புயல், வெள்ளத்தில் 545 கிராமங்களிலிருந்த மக்கள் வீடிழந்தார்கள்.

ஆந்திரா - கவாலி என்ற கிராமத்தில் மட்டும் 300 கோழிப் பண்ணைகள் முற்றாக நாசமானது! 50க்கும் மேற்பட்ட மக்கள் இறந்து போனார்கள். இது அரசே தரும் புள்ளி விபரம். நெல்லூர், பிரகாசம் மாவட்டங்களில் பெரும்பாலான கிராமங்கள் பல வாரங்கள் இருளில் மூழ்கிக் கிடந்தது. அறுவடைக்குத் தயாராக இருந்த மா, முந்திரி, எலுமிச்சை, புகையிலை பெருமளவில் நாசமானது. வெற்று வாக்குறுதிகள் வழங்கி, திரும்பவும் தேர்தலில் நின்ற எந்த ஒரு ஓட்டுப் பொறுக்கியும் பாதிக்கப்பட்ட கிராமங்கள் பக்கம் செல்லவேயில்லை. சென்றால் மக்கள் தோலுரித்து விடுவார்கள் என்ற பீதியில் அப்பகுதிகளைத் தவிர்த்து மற்ற பகுதிகளில் சுழன்றனர். அதிகார வர்க்கம் சிலசோற்றுப் பொட்டலங்களைப் போட்டுவிட்டு கள்ளக் கணக்கெழுதுவதில் மூழ்கிப்போனது.

மக்கள் வரிப்பணத்தில் கேளிக்கை, கும்மாளம், தரகு முதலாளிகளின் நிறுவனங்களுக்கு விளம்பரம் ஒருபுறம்! அற்ப பாதுகாப்பு ஏற்பாடுகள் கூட ஏதுமின்றி மக்கள் புயலிலும் வெள்ளத்திலும் மடிவது மறுபுறம்! மக்களின் உயிரைத் துச்சமாக கருதும் இந்த ஆட்சி அமைப்பை நாம் தரைமட்டமாக்குவது எப்போது?

